பக்கங்கள்:12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 02 வெள்ளிக்கிழமை 17.12.2021 கதிர் 42

### இனிது ரகசியம் அல்ல!

கவிழ்த்தலும், புதிய ஆட்சியை நிலை நிறுத்தலும்தான் உள்ளூராட்சி அரசியலாக இப்போது மாறி வருகின்றது.

வாக்குறுதி கொடுப்பதும், வாக்குறுதியை மீறி காலை வாருவதும் உள்ளூராட்சி அரசியலில் இப்போது கொடி பக்கம்02

# இலங்கையில் மேலும் மூவருக்கு ‘ஒமிக்ரோன்’ கொரோனா உறுதி



## அனைவரும் தடுப்பூசிகளைப் பெற வேண்டும்; விசேட வைத்திய நிபுணர் சந்திம கோரிக்கை

இலங்கையில் மேலும் மூவருக்குக் கொரோனா வைரஸின் புதிய திரிபான ‘ஒமிக்ரோன்’ தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைகழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோய் எதிர்ப்பு மூலக்கூறு பிரிவின் பிரதானியும் பேராசியருமான விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார். 2

# வெளிவிவகார அமைச்சருடன் இந்தியத் தூதர் அவசர சந்திப்பு

## மூடிய அறைக்குள் நீண்ட நேரம் பேச்சு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லே நேற்று பதில் நிதி அமைச்சரும் வெளிவிவகார அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸை அவசரமாகச் சந்தித்துள்ளார். 2



# பூஸ்டரைப் புறக்கணித்தால் நாடு மீளவும் முடங்கக்கூடும்

## எச்சரிக்கின்றது சுகாதாரத் தரப்பு



மக்கள் பூஸ்டர் தடுப்பூசியை உரிய காலப்பகுதிக்குள் பெறாவிட்டால் நாட்டில் நாளாந்தச் செயற்பாடுகள் மீண்டும் முடங்கக்கூடும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட 12

# மனோ எம்.பியை அமெரிக்கா வருமாறு பதில் தூதர் அழைப்பு



தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான த.மு.கூ. தூதுக்குழு நேற்று இலங்கைக் கான அமெரிக்கப் பதில் தூதுவரைக் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பின் 12

# மேலும் 21 பேர் மரணம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர். 2

# எரிபொருள் விலை அதிகரிப்படாது!

## வலுசக்தி அமைச்சர் திட்டவட்டம்



நள்ளிரவு முதல் அமுலுக்குவரும் வகையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளது என வெளியான செய்திகளை வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் தனது முகநூல் பக்கத்தில் நேற்று மாலை அவர் பதிவொன்றை 2

# கூட்டமைப்பினரின் தீர்மானத்துக்கு எதிராக சரவணபவன் போர்க்கொடி

## யாழ். மேயர் மணியைக் கண்டித்தும் அறிக்கை



எதிர்க்கட்சி என்றாலே ஆளும் கட்சியை எதிர்ப்பது தான் பணி என்று நினைக்கக்கூடாது. மக்கள் நலன் சார்ந்து சிந்தித்தும் செயற்படவேண்டும். அதேபோன்று எதிரணியையும் அரவணைத்துச் செல்லும் வகையில், அவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்காதவாறு யாழ்ப்பாணம் மாநகர சபை பட்ஜட்டை மேயர் 12

# யாழ்ப்பாணம் மக்களுக்கு சீனா தொடர்ந்து உதவும்!

## அந்நாட்டுத் தூதுவர் உறுதியளிப்பு

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

சீன அரசு தொடர்ந்தும் யாழ்ப்பாணம் மக்களுக்கு உதவிகளை வழங்கும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம் சமாசத்தில் மீனவர்களுக்கு வலைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கி 12





தென்னாடு

சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

மார்கழிப் பெருவிழா - 2021

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும், சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை மற்றும் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடியுள்ளது.

**காலம்** - மார்கழித் திங்கள் 10ம் நாள் 11ம் நாள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26)

இடம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சபாலிங்கம் அரங்கம்

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 021 221 2739 075 653 3111

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிப்பறக்கின்றது.

ஆங்காங்கே உள்ளூரில் நடக்கும் அரசியல் திருக்கூத்து – 'ஸேம் சைட் கோல்' கூட அடிக்கும் – கால்வாரல்கள் மலைப்பைத் தருவனவாக இருக்கின்றன.

பல இடங்களில் சம்பவங்களைப் பார்க்கும்போது இப்படி எல்லாமா நாக்கைப் புரட்டுவார்கள் என்று கேட்கவும் தோன்றுகின்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் நாறும் அரசியல் இப்போது பிரசித்தம்.

அதில் அங்கம் வகிக்கும் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தொடர்பில் தமிழரசுக் கட்சி நிர்வாகம் அடிக்கும் குத்துக்கரணம் – அந்தர் பல்டி – மகா பிரசித்தம். அது பற்றி விலாவாரியாக சில தினங்களுக்கு முன்னர் எழுதியிருந்தேன்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் உயிரிழந்தமையை அடுத்து அந்த இடத்துக்கு ஒருவரைத் தேர்வு செய்வதில் இடம்பெற்ற பிரசண்டம் தெரிந்ததுதான்.

சுயேச்சைக்குழு ஒன்றைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களில் ஒருவரான கணக்காளர் செல்வேந்திரா வல்லை நகர சபைத் தலைவராக நான்கு மாதங்களுக்கு முன்னர் தெரிவுசெய்யப்பட கிளர்ந்தெழுந்தார் சிவாஜிலிங்கம். தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்களின் கைகளில் – துரோகிகளின் அதிகாரத்தில் – வல்லை நகர சபை நிர்வாகம் போய்விட்டது என குய்யோ முறையோ என்று புலம்பினார் அவர்.

கணக்காளர் செல்வேந்திரா தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவரல்லர், இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்புக் காலத்தில் விடுதலைப் போராளிகளுடன் சேர்ந்து உழைத்த அவரின் நற்பண்பியல்புகள் பற்றி ஒரு தடவை என் பத்தியில் விவரித்திருந்தேன்.

நகர சபைத் தலைவர் செல்வேந்திரா சமர்ப்பித்த வரவு – செலவுத்திட்டம் கடந்த மாதம் சபைக்கு வந்த போது அது தோற்கடிக்கப்பட்டது. இரண்டு வாரங்கள் கழித்து மீண்டும் அது தோற்கடிக்கப்பட்டமையால் செல்வேந்திரா பதவியிழந்தார்.

இப்போது நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் செல்வேந்திராவே மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். என்னடா இது அதிசயமாக இருக்கின்றது, வரவு – செலவுத் திட்டத்தில் இரண்டு முறை காலை வாரித் தோற்கடிக்கச் செய்தவரையே மீண்டும் தலைவராகத் தெரிவு செய்திருக்கின்றார்கள், என அப்படியாயிற்று என்று தேடினேன்.

'டீல்' படிந்தது. விவகாரம் சுமுகமாகத் தீர்ந்தது என்பதுதான் உண்மை நிலைவரம்.

வல்வெட்டித்துறை நகர சபைக்கு உட்பட்ட பகுதியில் தீருவில் தூபியும் மைதானமும் இருக்கின்றன. அங்குதான், இந்தியப் படை இலங்கையில் நிலை கொண்ட காலத்தில் பலாலி முகாமுக்குள் தடுப்புக்காவலில் இருந்த சமயம், கொழும்புக்கு வல்வந்தமாகத் தம்மை கொண்டு செல்வதை ஆட்சேபித்து, சயனைட் குப்பியைக் கடித்து வீரமரணம் அடைந்த குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் நினைவுத்தூபி அமைக்கப்பட்டது. எனினும் இலங்கைப் படைகளால் அது பின்னர் தகர்த்தப்பட்டது.

பன்னிரு வேங்கையின் நினைவுத் தூபிக்குப் பதிலாக அங்கு அனைத்துப் போராளிகளுக்குமான நினைவுத் தூபி எழுப்பப்பட வேண்டும் என்பது ரெலோ போராளியாக இருந்த சிவாஜிலிங்கம் தரப்பின் ஆசை.

அதற்கு இணங்கினால் வரவு – செலவுத் திட்டத்தில் செல்வேந்திரா அணியை ஆதரிக்க முடியும் என சிவாஜிலிங்கம் தரப்பு நேரத்துடனேயே நிபந்தனை விதித்திருந்தது என அறிந்திருந்தேன். ஆனால் தீவிரப் புலி ஆதரவாளரான செல்வேந்திரா அதற்கு இணங்கவில்லை என்றும் அறிந்தேன்.

அதனால், அந்த 'டீல்' பேச்சு அப்போது வெற்றியளிக்கவில்லை.

இந்த செல்வேந்திரவைத்தான், நான்கு மாதங்களுக்கு முன்னர் அவர் வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவரான போது, தமிழ்த் தேசியத்துக்கு எதிரான சக்தி என சிவாஜிலிங்கம் விமர்சித்திருந்தார்.

இப்போது சிவாஜித் தரப்புடனான பேரம் பேசும் 'டீல்' படிந்ததும் அதே செல்வேந்திராவை மீண்டும் சேர்ந்து நகர சபைத் தலைவராக்கியிருக்கின்றது சிவாஜிலிங்கம் தரப்பு.

தீருவிலில் ஏனைய இயக்கங்களின் போராளிகளுக்கும் சேர்ந்து தூபி அமைக்கும் திட்டத்துக்கு செல்வேந்திரா இணங்குவதும் இப்போதைய 'டீல்' உடன்பாட்டில் அடக்கமா என்பது தெரியவில்லை.

இந்த 'டீல்' பேச்சின்போது செல்வேந்திராவின் சுயேச்சைக் குழுவில் செல்வேந்திராவுடன் மற்றைய இரு உறுப்பினர்களும் இருந்திருக்கின்றனர்.

மற்றத் தரப்பில் இன்னமும் தமிழ்க் கூட்டமைப்பின் சார்பில் சபையில் அங்கம் வகிக்கும் சதீஷ், கேசவன், சிவஞானசுந்தரம் ஆகியோரோடு கூட்டமைப்பில் இல்லாத சிவாஜிலிங்கமும் இருந்திருக்கின்றார்.

'டீல்' உடன்பாடு என்ன தெரியுமா?

தற்போதைய சபையின் உண்மையான பதவிக் காலம் இன்னும் இரண்டு மாதங்கள்தான். அந்த இரண்டு மாதங்களும் செல்வேந்திரா தலைவராக நீடிப்பார்.

அதற்குப் பின்னர் சபையின் பதவிக் காலம் ஓராண்டு நீடிக்கப்பட்டால், அந்த ஓராண்டில் முதல் கால் பங்கு – காலாண்டு – மூன்று மாதங்கள் – செல்வேந்திராவே பதவியில் நீடிக்க முடியும். (அதாவது இப்போதைய இரண்டு மாதங்களும், முதல் காலாண்டின் மூன்று மாதங்களுமாக மொத்தம் ஐந்து மாதங்கள் அவர் பதவியில் நீடிக்க முடியும்.)

எஞ்சிய மூன்று காலாண்டுகளும் சதீஷ், கேசவன், சிவஞானசுந்தரம் ஆகிய மூவரும் மாறி மாறி நகர சபைத் தலைவர்களாக இருப்பார்கள். அதாவது ஒவ்வொருவருக்கும் தலா மூன்று மாதங்கள்.

இதில் யார் முதலில், யார் அடுத்தவர் என்ற வரிசைக் கிரமத்தை ரெலோ தலைமைக்குழுத் தீர்மானித்து அறிவிக்கும். அதன்படி உரியவர் காலாண்டு தோறும் பதவியில் அமர்வதற்கு ஏனையோர் ஒத்துழைக்க வேண்டும்.

அதாவது அடுத்த ஓராண்டில் – நான்கு நகர சபைத்தலைவர்களை வல்வெட்டித்துறை காணவேண்டியிருக்கும்.

நல்ல 'டீல்' அப்பா இது...!

ரெலோ, சம்பந்தப்படாத ஒரு டீலில் யாருக்கு முதல் பதவி, யார் இரண்டாவது, மூன்றாவது முறைகளுக்குக் காத்திருக்க வேண்டும் என்ற முடிவை ரெலோ தலைமைக்குழு எடுக்கும் எனும் ரத்துக்கூட எழுத்தில் வடிக்கப்பட்டு, ஒப்பமிடப்பட்ட டீலில் சேர்க்கப்பட்டிருக்கின்றமை வியப்பிலும் வியப்பு.

எப்படி, எப்படி எல்லாம் அரசியல் நடக்கின்றது பாருங்கள். **- மின்னல் -**

## இலங்கையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, இலங்கையில் ஒமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளான ஒருவர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில், நேற்று மேலும் மூன்று பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், நாட்டில் ஒமிக்ரோன் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்வதன் காரணமாக, அனைவரும் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் விசேட வைத்திய நிபுணர் சந்திம ஜீவந்திர கேட்டுக்கொண்டுள்ளார்.

## மேலும் 21 பேர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 21 பேரில் 12 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 698 ஆக அதிகரித்துள்ளது.

## வெளிவிவகார .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது மூடிய அறைக்குள் நீண்ட நேரம் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

எனினும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவு தொடர்பிலும், வர்த்தக நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், இருதரப்புக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு தொடர்பான பல விடயங்கள் மற்றும் அண்மையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின் பெறுபேறுகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## எரிபொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவிட்டுள்ளார்.

அதில், நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலை அதிகரிப்பு என வெளியாகும் செய்தி உண்மைக்குப் புறம்பானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலை அதிகரிக்கவுள்ளது எனவும், இது தொடர்பில் இறுதி முடிவை எடுப்பதற்காக நேற்றிரவு 8 மணிக்குப் பதில் நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் முக்கிய கூட்டமொன்று நடைபெறவுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# நாடாளுமன்ற அமர்வு ஒத்திவைப்பு பின்னணியில் மறைமுக நிகழ்ச்சிநிரல்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டு





அரசின் மோசடிகளை நாடாளுமன்றத்தில் நாம் புட்டுவைப்போம் என்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி நாடாளுமன்ற அமர்வுகளை ஒத்திவைத்தார்.

- இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் எண்ணக்கருவின் பிரகாரம் சசுனட அருண நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரவணமுல்லை ஸ்ரீ சோமலோக விகாரையில் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலைக் கட்டடம் எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. பேரகம ஸ்ரீ ஞானவிமல பிரிவேனாவின் நிர்வாக தேரர் வண. பொலமருவே விமலதஸ்ச யின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாந்தோட்டை லுணுகம்வெஹர பிரதான அமைப்பாளரும் திஸ்ஸமஹாராம இணை அமைப்பாளருமான முன்னாள் தென் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தென்னகோன் நிலமே இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்ததோடு, திஸ்ஸமஹாராம பிரதம அமைப்பாளர் லால் சந்திர, சூரியவெள பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சுஹக பிரதீப், லுணுகம்வெஹர பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சமன் புஷ்பகுமார, பிரதேச சபை வேட்பாளர் ரங்க ரங்ஹெடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அண்மையில் இடம்பெற்ற சீனி மோசடியை நினைவு கூர்ந்த எதிர்க்கட்சித் தலைவர், நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னணியில் குறித்த மோசடி தொடர்பான விவரங்கள் வெளியிடப்படுவதை தடுக்கும் முயற்சி இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனி மோசடி மூலம் அரசின் வரி வருவாய்க்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு அது 1,590 கோடி ரூபா எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

திறைசேரிக்கு இவ்வளவு பணம் இழப்பை ஏற்படுத்திய மோசடி, சீனி வரி மோசடியே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

## தடுப்பூசியை கட்டாயமாக்கியமை; எதிர்த்து வழக்குத் தாக்கல்!

நோய்த்தொற்று ஏற்படுவதைத் தடுக்க, கொவிட் - 19 தடுப்பூசியைப் பெறுவது கட்டாயம் என்று சுகாதார அமைச்சகம் எந்த சட்டத்தையும் அல்லது விதிமுறைகளையும் வெளியிடவில்லை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சார்பில் உயர் நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

18 வயதுக்குட்பட்டவர்கள் கொவிட் தடுப்பூசியைப் பெறுவதைக் கட்டாயமாக்குவதற்கான அரசாங்கத்தின் முடிவு அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்று கூறி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

இதன்போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சட்டப் பிரதிநிதி இந்தத் தகவலை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

இந்த மனு உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சட்டப் பிரதிநிதி, தடுப்பூசியைப் பெற விரும்பும் எந்தவொரு நபரும் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம் என்றும், இது தொடர்பாக கட்டாய விதிமுறைகள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றும் கூறினார்.

கலாநிதி தாரிணி ராஜசிங்கம் உட்பட மூவரினால் இந்த அடிப்படை உரிமைகள் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொவிட் தடுப்பூசியைப் பெறுவதை கட்டாயமாக்கும் முடிவு சட்டத்துக்கு எதிரானது என்றும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் இல்லை என்றும் மனுதாரர்கள் அதில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக சட்டப் பிரதிநிதியின் சாட்சியத்தை பதிவு செய்த பின்னர், வழக்கு 2022 ஜனவரி 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## இலங்கை வரும் வெளிநாட்டவருக்கு ஜனவரி முதல் புதிய நடைமுறைகள்

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் இலங்கைக்கு வரும் அனைத்துப் பயணிகளுக்கும் புதிய நடைமுறை அமுல்படுத்தப்படவுள்ளது.

அதற்கமைய நாட்டுக்கு வரும் பயணிகள் தமது கையடக்க தொலைபேசியில் சுகாதார நிலையைக் குறிப்பிடும் கியு. ஆர். குறியீட்டை உள்ளிடுவது அல்லது அதன் பிரதியை எடுத்து வருவதை கட்டாயமாக்குமாறு சுகாதார அமைச்சு சுற்றுலா அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

விமான நிலையத்தில் பயணிகளின் நெரிசலைக் குறைப்பதற்காக இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எனினும், ஒரு பயணியால் அவ்வாறு செய்ய முடியாவிட்டால், அந்தப் பயணி சுகாதார நிலைமை தொடர்பான படிவத்தை பூர்த்தி செய்து பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சமர்ப்பித்த பின்னர் விமான நிலையத்தை விட்டு வெளியேறலாம் என அவர் கூறியுள்ளார்.

இலங்கை வரும் இலங்கையர் அல்லது வெளிநாட்டவர்கள் அனைவருக்கும் தங்களின் சுகாதார நிலையை அறிவிக்கும் படிவம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன் படிவத்தை நிரப்பவில்லை என்றால், ஒன்லைன் ஊடாக QR குறியீட்டை பயன்படுத்தி வருவதற்குமான நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரண்டு நடைமுறையும் இல்லாமல் பயணிகள் நாட்டிற்கு வந்தாலும் அவர்களை நிராகரித்து திருப்பி அனுப்ப மாட்டோம். சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் நாட்டிற்கு அனுமதிப்போம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அரசாங்கத்தின் தவறுகளை மூடிமறைக்க நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கவில்லை

### விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் கூறுகிறார்

அரசாங்கத்தின் தவறுகளை மூடி மறைக்க நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை, நாட்டின் உண்மையான நிலைமைகளை மக்களிடத்தில் எடுத்துக்கூறி ஒளிவுமறைவு இல்லாது ஆட்சியைக் கொண்டுசெல்கின்றோம் என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பு ஹொக்கி சம்மேளனத்தின் புதிய மைதான புனரமைப்பு நிகழ்வில் கலந்துகொண்ட வேளையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் -

அரசாங்கத்தின் தவறுகளை மறைக்க நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததாக எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர், உண்மையில் அவ்வாறான அனுபவம் அவர்களுக்கே உள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற பின்னர் கோப் குழு அறிக்கை நாடாளுமன்றத்துக்கு முன்வைக்கப்படவிருந்த நிலையில் அப்போதைய ஜனாதிபதியும், அரசாங்கமும் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தனர்.

ஆனால் இப்போது அவ்வாறான நோக்கத்தில் ஒத்திவைக்கவில்லை, மறைக்க வேண்டிய எந்தவொரு காரணியும் இருக்கவில்லை. ஜனாதிபதியின் அதிகாரத்துக்கு அமைய நாடாளுமன்றத்தை ஒத்திவைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தை 11 ஆம் திகதி கூட்டவிருந்த போதிலும் 18 ஆம் திகதி கூட்டப்படும், அதேபோல் எமது நிதி அமைச்சர் தனது வேலைத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளார்.

எந்தவித ஒளிவு மறைவும் எம்மத்தியில் இல்லை, இது சில வேளைகளில் எமக்கே பாதிப்பாக அமையும். ஆனால் உண்மைகளை மக்களுக்குக் கூறி நடவடிக்கைகளை எடுக்கின்றார். அமைச்சரவையிலும் அதனை பேசுகின்றார்.

நாட்டின் பொருளாதாரத்தை நாசமாக்கியவர்கள் இன்று எம்மிடம் வெவ்வேறு காரணிகளை கூறுகின்றனர். இன்று நாம் பாரிய தொற்றுநோய் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுத்து வருகின்றோம்.

இப்போதும் கடினமான காலகட்டமாகும் . ஆனால் மக்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுத்து நாட்டை அபிவிருத்தி செய்ய முயற்சிக்கின்றோம்.

தட்டுப்பாடுகள் இல்லாது மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்குவதே எமது எதிர்பார்ப்பாகும். அதேபோல் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக் கைகளை எடுப்போம். - என்றார்.

## கொல்லப்பட்ட பிரியந்த குமாரவுக்கு மாதாந்த சம்பளம் வழங்க ஏற்பாடு!

பாகிஸ்தானின் சியல்கோட்டில் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமார தியவதனவின் மாதாந்த சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதி வைப்பிலிடுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இதனை உறுதிப்படுத்தியுள்ளார். வெளிவிவகார அமைச்சில், பிரியந்த குமாரவின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு நிதியுதவி வழங்கிய சந்தர்ப்பத்தில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.



பிரியந்த குமாரவின் உடலை இலங்கைக்கு கொண்டு வந்தமை மற்றும் இறுதிச் சடங்குகளுக்கான செலவுகளை அரச நிதியில் ஈடுகட்டவும் அரசாங்கம் தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், அனைத்துச் செலவுகளையும் உரிய நிறுவனங்களே ஏற்றுக் கொண்டமையால் மதிப்பீட்டு தொகையை பிரியந்த குமாரவின் மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு வழங்க வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அதிகாரத்தால் வரும் ஆணவம்

பதவிகளும், பதவி ஆசைகளும், அதிகாரங்களும் ஆள்களையே தலைகீழாக மாற்றி விடுகின்றன.

வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் அந்தச் சீரழிவைத்தான் நாம் கண்டு வருகிறோம்.

இந்த நாட்டின் அரசியல் முறைமைகளுக்கும் சிக்கல்களுக்கும் சமஷ்டி முறைமைதான் உகந்தது, தீர்வு என்று 1926களில் வற்புறுத்தி நின்றவர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா. யாழ்ப்பாணம் வரை வந்து பல கூட்டங்களில் அதனை வற்புறுத்திப் பேசினார். அப்போதைய பத்திரிகைகளில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி, அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஆனால் மூன்று தசாப்தங்களை கடந்து, பதவி ஆசை பற்றிக் கொண்டபோது, குறுக்கு வழியில் விரைந்து ஆட்சியைக் கைப்பற்ற ஒரேவழி பௌத்த – சிங்களப் பேரினவாதத்தைக் கிளறி விடுவதுதான் என்று கருதி, தனிச் சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்தில் கொண்டு வருவேன் என சூளுரைத்து, இந்த நாட்டில் அடுத்த ஆறு தசாப்த காலங்களுக்கு இரத்த ஆறு ஓடுவதற்கான வன்முறைப் பிரளயத்துக்கு பிள்ளையார் சுழி போட்டார். சமஷ்டியை வலியுறுத்திய ஒரு சமரசவாதி, பதவி மோகத்தால் – அதிகார ஆசையால் – பேரினவாத வெறிகொண்ட பேயுருத் தோற்றத்தை எடுத்து உருவாடியமையைக் கண்டோம்.

ஏன் அதிகம் பின்னோக்கிப் போவான்? எண்பது கடைசியிலும், தொண்ணூறு ஆரம்பத்திலும் – குறிப்பாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மற்றும் பிரமேதாஸாவின் அதிகார காலத்தில் – இலங்கைத் தீவில் கட்டவிழ்ந்த மனித உரிமை மீறல் சம்பவங்களுக்காக குரல் கொடுக்கும் ‘சாம்பியனாக’ வெளிப்பட்டவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விவகாரங்களை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமை அமைப்புக்குக் கொண்டு சென்ற பிதாமகர்களில் பிர தானமானவர் அவர்தான். அப்படி மனித உரிமைகளுக்கான சாம்பியனாக விளங்கிய காரணத்தால் பிரேமதாஸ ஆட்சிக் காலத்தில் பெரும் நெருக்குவாரங்களை எதிர்கெண்டார் மஹிந்தர். கடைசியில் என்னவாயிற்று?

உலக வரலாறுகளில் ஹிட்லர், முசோலினி போன்றோருக்குப் பின்னர் நவீன உலகு நேரில் கண்ட மோசமான அடக்குமுறையாளராகவும், மனித உரிமை மீறல் குற்றங்களின் ஊற்றுக் கண்ணாகவும் விமர்சிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்படும் கீழ்மை நிலைக்குச் சென்றார் அதே மஹிந்தர். எல்லாம் எப்படி நேர்ந்தது? பதவி மீதான வெறியும், அதிகாரத் திமிரும், ஆட்சிச் செருக்கும்தான் ஒரே காரணம்.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் இன்று பேரினவாதத்தால் அடக்கப்பட்டு அழிவின் எல்லையில் நிற்கின்றார்கள். தங்கள் மீதான அடக்குமுறையை – அட்டூழியத்தை – எதிர்கொண்டிருக்கின்றனர். சமூக மயமாக ஒன்றுபட்டுத்தான் அவர்கள் அதனை எதிர்கொள்ள முடியும். எதிர்கொள்ள வேண்டும்.

போரின் பின் சமூகத்தைக் கட்டி எழுப்புதலிலும் – சமூக வலுவூட்டலிலும் – இந்த ஒற்றுமைப்பட்ட எழுச்சி முக்கியமானது. அதுதான் நெருக்கடிகளை மக்கள் சமூகம் எதிர்கொள்வதற்கான நியாயமான முறைமை.

சமூகங்களை நேர்சீர்படுத்தும் பொதுப்பணியில் ஈடுபட்டுள்ள மனித நேய அமைப்புகள் கூட சமூகத்தின் அங்கத்தவன் ஒவ்வொருவனையும் ஒன்றிணைத்து, கூட்டு வாழ்வில் மேம்படவே வழிகாட்டுகின்றன. உழைக்கின்றன.

தமிழர்களிடமிருந்து காணிகளைப் பிடுங்கும் – அதிகாரத்தால் பறிக்கும் – அட்டூழியத்தையும் தமிழ் சமூகம் ஒற்றுமைப்பட்டே எதிர்கொள்ள வேண்டும். அதுதான் முறைமை. அதுதான் நியாயம்.

ஆனால், மனித நேய அமைப்புகளில் இதுவரை செயற்பட்டு வந்தவர் எனப் பீற்றிக் கொள்ளும் வடக்கு மாகாண ஆளுநர், காணி அபகரிப்பு விடயத்தில் அதற்கு எதிரான சமூகக் கூட்டுப் பங்களிப்பு நியாயத்தைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

காணிகளைப் பறிகெடுப்பவர் மட்டும்தான் எதிர்ப்புக் காட்டலாம். ஏனையோருக்கு அந்த சமூகப்பொறுப்பும் பங்களிப்பும் கிடையாது என்ற சாரப்பட்ட அவரின் மமதைப் பேச்சு, அவர் மனித நேய அமைப்புகளில் செயற்பட்டவர்தானா என்ற சந்தேகத்தை எழுப்பி நிற்கின்றது. அதிகாரத்தால் வரும் ஆணவம் என்பதில் இதுவும் அடங்குமோ...?

# மிகைப்படுத்தப்பட்ட வரவுடன் கூடிய வரவு – செலவுத் திட்டம்!

### யாழ்.மாநகர பட்ஜெட் விவாதத்தில் உறுப்பினர் லோகதயாளன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது 2022 ஆம் ஆண்டுக்கான வருமானமாக காட்டப்படுவது அதிக மிகைப்படுத்தப்பட்டுள்ளளது என உறுப்பினர் ந.லோகதயாளன் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நேற்றுமுன்தினம் முதல்வர் மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் மீதான விவாதத்தின் போதே மேற்கண்டவாறு அவர் உரையாற்றினர்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்–

2019 ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்திலே வருமானமாக கணிப்பீட்டுப் பெறுமதி 1,132 மில்லியன் ரூபாவாகும். ஆனால் கிடைத்த உண்மை வருமானம். 897,695 மில்லியன் ரூபா கிடைத்தது. அந்த ஏப்ரல் மாதம் ஏற்பட்ட ஈஸ்டர் குண்டுவெடிப்பு இதற்கு காரணமாக இருந்தது.

இதேபோன்று 2020ஆம் ஆண்டுக்கு 1,208 மில்லியன் ரூபா கணிப்பீடு செய்யப்பட்டது. ஆனால் உண்மை வரவு 865 மில்லியன் ரூபா மட்டுமே ஆகும். அதற்கும் திடீர் கொரோனா காரணமாக இருந்தது. இதன் பின்பு தற்போதைய முதல்வரால் 2021 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டத்தின் உத்தேச வரவு 1,233 மில்லியன் ரூபா என கணக்கிட்ட போதும் இன்று வரையில் 872 மில்லியன் 8 லட்சத்து 91 ஆயிரத்து 830ரூபா மட்டுமே கிடைத்துள்ளது.

1200 மில்லியனிற்கு தயாரித்த வரவு– செலவுத் திட்டமே சொகுசு வரவு– செலவுத் திட்டம், மிகைப்படுத்தப்பட்ட வரவு என்று கூறிய நீங்கள் தற்போது 2022 ஆம் ஆண் டிற்கு 1,466 மில்லியன் ரூபா உத்தேச வருமானம் என்பது மிகைப்படுத்தப்பட்ட பெறுமதி ஆகும். ஏனெனில் கடந்த 3 ஆண்டுகளில் 900 மில்லியன் ரூபாவினை எந்த ஆண்டும் எட்டவில்லை .இந்த நிலைமையில் கொரோனாவும் தீரவில்லை. ஆகவே இந்தப் பெறுமதியை எட்ட முடியாது என்றார்.

# போதுமான எரிபொருள் கையிருப்பில் வீணாக அச்சப்படத் தேவையில்லை

### பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

நாட்டில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. தற்போதும் போதுமானளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டபிள்யு.டபிள்யு. டீ.சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

டொலர் நெருக்கடி காணப்படுகின்ற போதிலும், எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, உரிய காலத்தில் அவ்வப்போது தேவையான எரிபொருள் இறக்குமதி செய்யப்படும். எரிபொருளை இறக்குமதி செய்வதில் எவ்வித சிக்கலும் கிடையாது.

ஆகவே, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப் போவதாக செய்திகள் வெளியாகியிருக்குமாயின் அவை உண்மைக்கு புறம்பானவையாகும். மக்கள் இது தொடர்பில் வீண் அச்சமடையத் தேவையில்லை. –என்றார்.

# இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவிப்பதில் அரசியல்வாதிகள் அசமந்தம்

### அங்குள்ள மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்படுகின்ற காணிகள் தொடர்பிலோ அல்லது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பிலோ எந்த விடயங்களும் பேசப்படாமல் சட்டவிரோதமாக காணிகளை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிலரது தனிப்பட்ட தேவைகள் பற்றி அரசியல்வாதிகள் அக்கறை செலுத்தவில்லையென குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக செவ்வாய்க்கிழமை பிற்பகல் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வினோநோதராதலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராஜா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோரின் பங்கு பற்றுதலுடன் பிரதேச சபை மண்டபத்தில் கலந்துரையாடலொன்று நடைபெற்றுள்ளது.

இவ்வாறு வருகை தந்த அரசியல்வாதிகள் பொது மக்களுக்கு உரிய பொதுவாக உள்ள காணி விடயங்கள் பற்றி பேசாமல் அது தொடர்பாக எந்த ஒரு தீர்மானங்களையும் எடுக்காது, மாந்தை கிழக்கில் அதிகாரிகளினதும், அரசியல்வாதிகளினதும், செல்வாக்குடனும் முன்னாள் நாடாளமன்ற உறுப்பினர், ஒருசில பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர் ஆகியோர் கனரக வாகனங்களை கொண்டு நில மாபியாக்களாக பல ஏக்கர் காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு கண்டு அந்த காணி பிரச்சனைகளை தீர்ப்பதற்காக இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேருகை தந்திருந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் வனவளத் திணைக்களத்திடம் இருந்து விடுவிக்கப்பட வேண்டிய ஆயிரக் கணக்கான ஏக்கர் காணிகள் பற்றி எந்த விடயங்களும் பேசப்படவில்லை.

குறிப்பாக துவரங் குளத்தின் கீழ் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காணிகளை விடுவிப்பது தொடர்பிலோ அல்லது மூன்று முறிப்பு பிரதேசத்திலுள்ள கொல்லவிளங்குளம், அம்மி மிதித்த குளம், நீல வெட்டிய குளம் போன்ற இடங்களில் பெருமளவான வயல் நிலங்கள் வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவிக்கப்படட வேண்டிய விடயங்கள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை.

சிறாட்டிகுளம் பகுதியில் பயிர் செய்கை மேற் கொண்டு வரும் விவசாயக்காணிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வனவள திணைக்களத்தால் எல்லை இடப்பட்டிருக்கின்றன. ஆனால் இவ்வாறான எந்த விடயங்களும் அங்கு பேசப்படாது, இந்தப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்துக் கொள்ளாது மாந்தை கிழக்கு பிரதேசத்தில் இருக்கின்ற பலர் அரசியல் செல்வாக்குடன் பெருந்தொகையான காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கின்றனர்.

குறிப்பாக இந்தப் பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வயல் காணிகளின்றி வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான காணிகளை பெற்றுக் கொடுப்பது அல்லது வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் எந்தவிதமான விடயங்களும் பேசப்படாது அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் இருப்புக்காக நிலமாயாக்களாக காணிகளை வைத்திருப்பவர்களுக்கு ஆதரவாக அவர்களுடைய பிரச்சினைகளை மாத்திரம் கேட்டறிந்து செல்கின்றனர் என பாதிக்கப் பட்ட பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையை கைப்பற்றும் நோக்கத்தில் சர்வதேச வல்லரசுகள் இயங்குகின்றன



## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 17

உலக வல்லரசுகள் பலமான அரசியல் உடன்படிக்கைகளையும், நிதி உடன்படிக்கைகளையும் வைத்துக்கொண்டு எமது தேசிய வளங்களை மட்டுமல்லாது வலுசக்தி, மூலதன வளங்களையும் கைப்பற்றும் நோக்கத்தில் எமது பலவீனமான, வீழ்ச்சி கண்டுள்ள இராச்சியத்தை கைப்பற்ற நினைப்பதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக்குறை நிலையில், நாட்டில் இறுதி காலாண்டு மிகவும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப்போகின்றது என்பது தெளிவாக வெளிப்படுகின்றது. தேசிய நிதி மற்றும் வெளிநாட்டுக் கையிருப்பு பற்றாக் குறை என்பன பாரிய சூறாவளியாக இலங்கையைத்தாக்கும்.

இவ்வாறான நிலையில் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டு தீர்மானம் மிக்கதாகும். 2022 ஆம் ஆண்டில் 700 கோடி டொலர் கடன்களை இலங்கை செலுத்த வேண்டியுள்ளது. இவற்றில் இருதரப்பு கடன்களாக 55 கோடி டொலர்களை செலுத்த வேண்டும், சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய கடனாக 60.4 கோடி டொலர்களை செலுத்த வேண்டும், இறக்குமதிக்கான நிதியாக 51.4 கோடி டொலர்களைச் செலுத்த வேண்டும், சர்வதேச பிணைகளுக்காக 150 கோடி டொலர்களையும் அதற்கான வட்டியாக 108.3 கோடி டொலர்களையும் செலுத்த வேண்டியுள்ளது.

இலங்கை அபிவிருத்தி பிணைமுறிகளாக 144.1 கோடி டொலர்களையும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய தொகையாக 120 கோடி டொலர்களையும், பங்களாதேஷிடம் வாங்கிய கைம்மாற்றல் நிதியாக 20 கோடி டொலர்களையும் செலுத்த வேண்டியுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மாத்திரம் 94கோடி டொலர்களுக்கும் அதிகமான தொகையை செலுத்தியாக வேண்டும். ஆனால் எமது கையிருப்பில் வெறுமனே 14 கோடி டொலர் மட்டுமே உள்ளன.

ஆகவே, வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை முற்றுமுழுதாக வீழ்ச்சி காணும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு இந்த ஜனாதிபதி ஆட்சியில் இருப்பார், ஆனால் இன்னும் ஒரு மாதம் மட்டுமே தான் ஆட்சியில் இருப்பேன் என்ற நிலைப்பாட்டில் தீர்மானம் எடுக்கின்றார். தற்காலிக தீர்வுகளைப் பெற்று நெருக்கடிகளை சமாளிக்க முயற்சிக்கின்றார்.

அதேபோல் இந்த நெருக்கடி நிலைமைகளை பி.பி. ஜெயசுந்தரவின் மீது சுமத்தி அவரை நீக்க நடவடிக்கை எடுக்கின்றனர். அவரும், அஜித் நிவாட் கப்ராலும் இந்த குற்றத்தில் பங்குதாரர்கள்தான், ஆனால் பி.பி.ஜெயசுந்தரவை பதவி நீக்கிவிடுவதால் இந்த நெருக்கடிக்குத் தீர்வு கிடைத்துவிடாது. இதற்குப் பிரதான காரணம் ராஜபக்ஷவினரேயாவர்.

அதேபோல் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வதா, இல்லையா என்பது தொடர்பாக அரசாங்கம் ஆராய்ந்து கொண்டுள்ளது. ஆனால் இப்போது செல்ல முடியாது, காலம் கடந்துவிட்டது. இனி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை அரசாங்கம் மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தேசிய வளங்களை சர்வதேச நாடுகளுக்கு விற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால் ஆரோக்கியமான வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரப்போவதில்லை. இந்த சூழலில் சர்வதேச சக்திகள், எமது பலவீனமான, வீழ்ச்சிகண்டுள்ள இராச்சியத்தை கைப்பற்றும் முயற்சியில் சூழ்சிகள் இடம்பெற்று வருகின்றன.

உலக வல்லரசுகள் பலமான அரசியல் உடன்படிக்கைகள், நிதி உடன்படிக்கைகளை வைத்துக்கொண்டு எமது தேசிய வளங்களை மட்டுமல்ல, வலுசக்தி, மூலதன வளங்களையும் கைப்பற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. அடுத்த முப்பது ஆண்டுகளுக்கு எம்மால் விடுபட முடியாத அடிமைத்தனத்திற்குள் சகலரையும் நெருக்கும் நோக்கத்தில் நாட்டை ஆளும் இரண்டு வெளிநாட்டுப் பிரஜைகளும் முயற்சிக்கின்றனர். இவர்களின் பிடியில் இருந்து நாட்டை விடுவித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் ஒட்டுமொத்த நாட்டு மக்களும் பாதிக்கப்படுவார்கள். - என்றார்.

சிவ சிவ
திருச்சிற்றம்பலம்

# மார்கழிப் பெருவிழா - 2021

திருமுறையே சைவநெறிக் கருவூலம் தென்தமிழின் தேன்பாகு ஆகும்
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடமும் சைவ மாணவர் சபையும் இணைந்து நடாத்தும் மார்கழிப் பெருவிழா இம்முறை சிலை நல்லோரை மார்கழித்திங்கள் 10அம் நாள் சனிக்கிழமை மற்றும் 11 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 25 மற்றும் 26) திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடாத்த திருவருள் கைகூடுகூடியுள்ளது)

## மார்கழித் திங்கள் 10ம் நாள் சனிக்கிழமை (டிசெம்பர் 25)

### அப்பர் சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் கோயில் பூசை

**துவக்க உரை** :- சிவத்திரு. திருவம்பலம் தென்னவன் ( நிறுவுனர் - தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்)
**தலைமை உரை :-** பேராசிரியர்.சிவத்திரு. சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா (துணை வேந்தர் - யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம்)
**திருமுறை விண்ணப்பம் (அப்பர் தேவாரம்):-** சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்
**தொண்டு நெறி** :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தல்:-** மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

### சம்பந்தர் சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை

**தலைமை உரை** :- சிவத்திரு. நல்லையா விஜயசுந்தரம் (முதன்மை ஆசிரியர் - வலம்புரி நாளிதழ்)
**திருமுறை விண்ணப்பம் (சம்பந்தர் தேவாரம்) :-** கலாநிதி. திருமதி.சுகன்யா அரவிந்தன் குழுவினர்
**மகன்மை நெறி** :- தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
**அடியார் பெருமை** :- ஈழத்து ஓதுவார்கள் கௌரவிப்பு
**நன்றியுரை** :- சிவத்திரு. அமிர்தலிங்கம் லதாங்கன் (பொதுச் செயலாளர் சைவ மாணவர் சபை)

## மார்கழித் திங்கள் 11ம் நாள் ஞாயிற்றுக்கிழமை (டிசெம்பர் 26)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள் அமர்வு



காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை
யாழ்ப்பாணம் இந்து கல்லூரி
ஞானலிங்கேச்சரர் திருக்கோயில் பூசை

**துவக்க உரை** - சிவத்திரு.ஜெயபாலன் தவேதன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)
**தலைமை உரை :** சிவத்திரு.இளங்கோவன் இலட்சுமணன் (செயலாளர் - கல்வி அமைச்சு, வடமாகாணம்)
**திருமுறை விண்ணப்பம் (சுந்தரர் தேவாரம்)** - சிவத்திரு. நவரத்தினம் பரந்தாமன் குழுவினர்.
**தோழமை நெறி** - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
**அடியார் தமக்கு அமுது செய்வித்தல்** - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை

### மாணிக்கவாசக சுவாமிகள் அமர்வு



மதியம் 1.30 மணி முதல் மாலை 5.00 மணிவரை

**தலைமை உரை :** சிவத்திரு.கணபதிப்பிள்ளை மகேசன் (அரசாங்க அதிபர் - யாழ் மாவட்டம்)
**திருமுறை விண்ணப்பம் (திருவாசகம்)** அன்பு நெறி - தமிழ்நாடு மதுரை சொ.சொ.மீ சுந்தரம் ஐயா
**கௌரவிப்பு நிகழ்வு** - தொகுப்பு: சிவத்திரு.தில்லையம்பலம் கௌரீசன் (பொருளாளர் - சைவ மாணவர் சபை)
**நன்றியுரை** - சிவத்திரு.வனராஜ் சசிராஜ் (நிர்வாகச் செயலாளர் - சைவ மாணவர் சபை)

**அணிசெய் இசைக் கலைஞர்கள்**



**மிருதங்கம்** - சிவத்திரு மகேந்திரன் லோகேந்திரன்
**வயலின்** - சிவத்திரு கேதீஸ்வரன் வேலதீபன்
**புல்லாங்குழல்** - சிவத்திரு.கமலநாதன் தேசிகன்
**முகர்சங்கு** - சிவத்திரு. கந்தசாமி நந்தகுமார்
**நிகழ்ச்சித் தொகுப்பு:** சிவத்திரு.செந்தமிழாதன் (தலைவர் - சைவ மாணவர் சபை) மற்றும் சிவத்திரு.பாலுசாமி சிவமாதவன் (ஆசிரியர் - தென்னாடு திங்கள் இதழ்)

தீநுண்மி பெருந்தொற்றுப் பரவல் ஒழுங்குகளால் குறிப்பிட்ட இருக்கைகள் மட்டுமே உள்ளமையால் பங்குபற்ற விரும்பும் அடியவர்கள் தென்னாடு மடத்தில் முன்பதிவு செய்து கொள்ளுங்கள். முன்பதிவு செய்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
021 221 2739 075 653 3111



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 223

**577. அந்த புதிய அணுகுமுறை எதுவென தெளிவாக்கப்பட்டதா?**

ஈழத்தமிழர்களின் சர்வதேச நீதிக்கான நியாயப்பாடு கொண்ட வழிவரை படத்தையும்போராட்ட அரசியலின் புலம்பெயர் பரிமாணத்தையும் தாயகத்தில் புரையோடிப் போயிருக்கும் கட்டமைக்



கப்பட்ட இன அழிப்பை எதிர்கொள்ள வேண்டிய அறம் சார்ந்த வழிகளை தகர்த்துவிடும் வெளிப்படுத்தல்களாகவும் இவை அமைந்துவிடுகின்றன என எடுக்கப்பட்ட முயற்சிகளை தமிழ்நெற் கண்டித்தது.

ஆதலால் இந்திய அணுகுமுறை போன்ற அறம் சார்ந்த வழிகளை அணுகாது மூலச்சிக்கலை புரிந்து கொள்ளத் தேவையான விளக்கத்தையும் எதிர்கால வழிவரை படம் குறித்த வருமுன் காப்போன் புரிதலையும் எடுத்தியம்ப வேண்டியது இன்றைய சுழலில் அவசியமாகிறது எனவும் அறிவித்தார்கள்.

திரும்ப திரும்ப வாதாட்ட வலுவுக்காக தெரிவித்த இந்த சுற்றியிருக்கும் போர்வைகள் விலத்தி சொல்லப்படுவதின் சாரம் எதுவெனப் பார்த்தால் அவர்களது அணுகுமுறை இன அழிப்புக்கான சர்வதேச நீதிக்காக அவர்களது தமிழ் வாதாடுகளம் (tamil advocate.org) முன்னெடுத்து வரும் வழிவரை படத்தில் தமிழ்மக்கள் ஒன்றிணைந்து மனித உரிமை பேரவையின் அடுத்த அமர்வில் கருத்து வைக்க வேண்டும். அதாவது அந்த கருத்து தமிழர்கள் மேல் நடத்தப்பட்டது. இனப்படுகொலை என ஐ.நா. பரிந்துரைக்கும் படி தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்றாகக் கேட்டு அதன் அடிப்படையில் வரும் பரிகார நீதியை வலியுறுத்த வேண்டும் என்பது.

சென்ற அமர்வின் போது எல்லா தமிழ்க் கட்சிகளும் கூட்டு சேர்ந்து கடைசி நேரத்தில் ஐ.நா. மனித உரிமை மன்றில் இருந்து தமிழர் மீதான அட்டூழியங்களுக்கான விசாரணைகளை வெளியெடுத்து அதை ஐ.நா. காரியதரிசிக்கு பாரப்படுத்த வேண்டும் என கோரினார்கள். இது அவர்கள் தமிழ்மக்களுக்காக நடத்திய அரசியல்.

ஐ.நா. மனித உரிமை மன்றினை அப்படியான தீர்மானங்களோ, கோரிக்கைகளோ கட்டுப்படுத்துவதில்லை. தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டவர்களானாலும் அவற்றில் பங்குதாரர்கள் அல்ல. பார்வையாளர்களே அப்படியான தீர்மானங்களை மனித உரிமை மன்றின் அங்கத்துவ நாடுகளே மேற்கொள்ள வேண்டும்

அப்படித்தான் அங்கத்துவ நாடுகள் வெளியே எடுத்து ஐ.நா. காரியதரிசிக்கு பாரப்படுத்தினாலும் அதை அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பாரப்படுத்த ஐ.நாவின் பாதுகாப்பு சபையின் ஆதரவும் சம்மதமும் பெறவேண்டும். அந்த சம்மதத்தை சீனா, ரஷ்யா போன்ற ஸ்ரீலங்காவின் நட்பு நாடுகள் தங்களிடம் இருக்கும் நிராகரிக்கும் அதிகாரத்தினால் தடுப்பார்கள். சர்வதேச புவியியல் அரசியல் சூழ்நிலைகளில் இது அங்கேயே தேங்கிக் கிடக்க வழியுண்டு. அப்படி பாரப்படுத்தப் பட்டாலும் அவை விசாரணைகளில் முன்னேறி வரக்கூடிய காலத்தையும் பார்க்க வேண்டும்.

இவை சர்வதேச சட்டங்களின் விதிகளானாலும் அதனோடு பின்னிப்பிணைந்துள்ள வல்லரசு அரசியலையும் அவை ஏற்படுத்தும் தாக்கங்கள பற்றியும் கைவலிக்க எழுதியாயிற்று.

எடுத்துச் சொல்லப்படும் புதிய அணுகுமுறை புதிய சட்டத்தின் மூலமோ அல்லது குடியரசு யாப்பின் ஊடாகவோ 13ஆம் திருத்தத்தின் மேலே போயோ அல்லது அதிகாரப் பரவலின்றி (devolution of power) அதிகாரங்களை பகிர்ந்து கொள்ளும் (sharing of power) நோக்கங்களுக்கான பொறிமுறையானால் அது வரவேற்கத்தக்கது. ஆனால் நடைமுறையில் இருக்கும் அரசியலின் பேராண்மைத் திமிரில் “எனக்கு வழிந்தால் அது இரத்தம் உனக்கு வழிந்தால் அது தக்காளி சட்னி” என்ற மனோபாவத்தில் அவை போன்ற சட்டங்களோ குடியரசு அமைப்போ வரும் வாய்ப்பு உண்டா எனவும் காலம் காலமாக இதனை சிங்களத் தலைவர்களுடன் பேசித் தீர்க்க விரும்புவோர் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**578. அப்படியானால் ஐ.நாவின் மனித உரிமை மன்றின் முன்னான அணுகுமுறை தேவையற்றதா அல்லது பிரயோசனமற்றதா?**

அப்படியல்ல வைத்தியரும் மருந்தும் பரிகாரமும் நோயாளி இருந்தால் தான். இங்கோ இந்த 12 வருடங்களில் போர் முடிந்த பின்னும் நல்லாட்சிக் காலங்களில் கூட ஒரு நாடு, ஒரு ஆட்சி என்பது கைவிடப்படவில்லை, தீவிரமாக்கப்பட்டது. முன்னில்லாதவாறு தமிழ் பிரதேசங்



களும் அவர்களது வாழ்வு முறைகளும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. இன்றைய அரசின் திட்டம் வடக்கு கிழக்கு பகுதிகளில் சிங்கள மக்களை குடியேற்றி அத்தோடு தமிழ்க் கிராமங்களை பெரும்பான்மை சிங்களக் கிராமங்களை இணைத்து தமிழ் பெரும்பான்மையற்ற மாகாணங்களை இல்லாமல் ஆக்குவது தான் நடத்தப்படும் வேகத்தில் அது ஒன்றிரண்டு வருடங்களில் முடிந்து விட்டால் அரசாங்கத்துக்கு ஆதரவாக இயங்கும் தமிழ் பரப்புகளோடு எல்லா மாகாணங்களிலும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கே அதிகாரம் இருக்கும். அதன்பின் அதை பகிர்வது என்பதும் தமிழ் பிரதேசங்கள் என உரிமை கோரவும் பாதிக்கப்பட்ட நோயாளி இருக்க மாட்டார். உடனுதவியோடு ஐ.நாவின் முன்னான கட்டமைப்பை சட்டவாளர்கள் சட்டத்தரணிகளின் அறிவுறுத்தல்களோடு முன்னெடுத்துச் செல்ல விட்டு அரசியலுக்கு முக்கியத்துவம் வேண்டும். தற்சமயத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் பதியப் பட்ட சமர்ப்பணங்கள் கூட இனப்படுகொலையை தவிர்த்து சமர்ப் பிக்கப்பட்டன என்ற கோபமும் ஆதங்கமும் தமிழ் நெற் பகுதிக்கு உண்டு. ஆனால் அப்படியாக பதியப்பட்டவை நுணுக்கமாக ஆராயப்பட்டு குற்றவியல் நீதிமன்றில் கால்பதிப்பதற்காக செய்யப்பட்டவை என்பது புரியப்பட வேண்டும். அவை போன்றவை மேலும் முன்னெடுக்கப்பட்டு அழுத்தங்கள் தரப்படலாம். அதனை அவர்கள் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்தி முன்னெடுக்கலாம் அதற்கு அவர்களுக்கு, தமிழ் மக்



களுடைய ஒருமித்த தீர்மானம் தேவையில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளே காணும் இந்தியாவில் வாடும் அகதிகளை பார்த்தால் அது விளங்கும்.

**579. பதின்மூன்றாம் திருத்தத்தை தீர்வாக அமுல்படுத்தவும் இந்தியாவின் உறவை மேலும் வலுப்படுத்துவதற்காகவா இந்த வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது?**

இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்தி அதனுடன் இணைந்து வேலை செய்யக்கூடிய சர்வதேச புலம்பெயர் கட்டமைப்பை ஏற்படுத்தி அதனூடாக சர்வதேசத்துடன் செயல்படுவது தான் பிரதான நோக்கமாக இருந்தது. அப்படி உருவாகும் கட்டமைப்பு தமிழ் மக்களின் வெளிவிவகார அமைச்சு போல இயங்கும் வடிவமைப்பாகவும் அவர்களின் சர்வதேச அரசியலை முன்னெடுப்பதாக இருக்க வேண்டும் என எண்ணப்பட்டது.

1986இற்கு முன் தமிழர் தகவல் நிலையம் ஐ.நாவில் கூட இந்த அணுகுமுறைகளில் தான் சர்வதேசத்தை எட்டும் நோக்கை மையப்படுத்தியது. உதாரணத்திற்கு முக்கியமான ஆவணமோ தகவல்களோ மனித உரிமை மன்றின் அங்கத்தினர்களுக்கோ அன்றில் ஐ.நாவின் பிரதிநிதிகளுக்கோ சென்று சேர வேண்டுமானால் அவற்றை இந்தியப் பிரதிநிதியிடம் கையளித்தால் அவர்கள் ஊடாக அவர்களின் ஆதரவான குறிப்புக்களுடன் சென்று சேரும் இன்றோ ஒவ்வொரு நாட்டு பிரதிநிதிக்கும் சென்று கதவை தட்டுகிறோம் அல்லது எதிர்பட்டால் கொடுக்கிறோம்.

1987இன் பின் இந்தியாவில் சென்னையில் இயங்கிய தமிழ் தகவல் நிலையம் நடத்த முடியாத படி செய்ய எடுக்கப்பட்ட வேலைத்திட்டம் பதின்மூன்றாம் திருத்தத்தை தீர்வாக கொள்ளவில்லை. இலங்கை, இந்திய ஒப்பந்தத்தில் தமிழருக்காக பொருத்தி கொள்ளப்பட்டவையை அமுல்படுத்த கோருவதே பிரதான நோக்கமாக இருந்தது. அதனை அமுல்படுத்தும் முன்னோடியாக குடியரசு யாப்பில் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட 13ஆம் சரத்தை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவர கேட்பதென்பதும் பிரேரிக்கப்பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தம் சர்வதேச சட்டவலிமை கொண்டது. நடந்த சம்பவங்களால் அமுல்படுத்துவதில் வீரியம் குன்றியிருந்தாலும் இரு பகுதியினரும் அதை காலாவதியாக்கவில்லை. தமிழ் நாட்டில் அகதிகளாக தஞ்சம் கோரியிருக்கும் மக்களை ஈழத்தில் அவர்கள் முன்னிருந்த பிரதேசங்களுக்கு மீளப்பெறுவது அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெறவேண்டும்.

ஒப்பந்தம் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்தமையால் பிரபாகரனும் அந்த உறுதிப்பாட்டில் தான் தமிழ் மக்களின் பாதுகாப்பை இந்தியாவின் கையில் கொடுத்து ஆயுதங்களை கையளிக்கிறேன் என சுதுமலை அம்மன் கோவிலில் ஏற்றுக்கொண்டார்.

பின்னர் பிரபாகரன் தன்னாலும் விடுதலை புலிகளாலும் தான் அதை செய்ய முடியும் என இந்தியாவை வெளியேற சொன்னாலும் இன்றுள்ள வெற்றிடத்தில் சிங்கள அரசின் தற்போதைய தொடர்ந்த ஆக்கிரமிப்பிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பு அந்த ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு உண்டு.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# கடந்த அரசில் நடந்த முறைகேடுகள் தற்போதைய அரசிலும் உள்ளனவாம்!

## அத்துரலியே ரத்ன தேரர் காட்டம்



சேதனப் பசளை திட்டத்தை செயற்படுத்த முறையான திட்டங்கள் வகுக்கப்படவில்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிலைபேறான விவசாய கொள்கை திட்டமிட்ட வகையில் பலவீனப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தில் காணப்பட்ட முறைகேடுகள் தற்போதைய அரசாங்கத்திலும் காணப்படுகின்றன என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பிரதான பங்காளிக் கட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்த 'மக்கள் பேரவை' மாநாடு கொழும்பில் இடம்பெற்றது.

அந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கைத் திட்டத்துக்கு முரணான வகையில் பல திட்டங்கள் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டுள்ளன.

அதன் காரணமாகவே மக்கள் இன்று அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள். தவறுகளைத் திருத்திக்கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற எண்ணப்பாடு ஒரு தரப்பினருக்குக் கிடையாது என்பதை பல விடயங்கள் தெளிவுப் படுத்தியுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சேதன பசளைத் திட்டம் சிறந்ததாகக் காணப்பட்டாலும் அது சவால்மிக்கது.

சேதன பசளைத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடுகள் வெளிநாடுகளில் இருந்து சேதனபசளைகளையும், சேதன இரசாயனத் திரவங்களையும் இறக்குமதி செய்யவில்லை. நாட்டில் சேதன பசளைத் திட்டம் செயற்படுத்தப்பட்ட நிலையில் சேதன பசளை இறக்குமதி செய்யப்பட்டது.

சேதன பசளைத் திட்டத்தை முறையாக செயற்படுத்த உரிய திட்டங்கள் வகுக்கப்படவில்லை. கட்டம் கட்டமாக செயற்படுத்த வேண்டிய திட்டம் ஒரு தடவையில் அறிமுகப்படுத்தியதன் விளைவை தற்போது முழு நாடும் எதிர்கொண்டுள்ளது.

சேதன பசளைத் திட்டத்தைச் செயற்படுத்த 45 பேரை உள்ளடக்கிய செயலணி நியமிக்கப்பட்டது. திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்த செயலணி ஒரு தடவை கூடக் கூடவில்லை.

அவ்வாறான பின்னணியில் எவ்வாறு சேதன பசளை திட்டம் வெற்றிபெறும். சேதன பசளைத் திட்டத்தைப் பலவீனப்படுத்த வேண்டும் என அரசாங்கத்திற்குள் ஒரு தரப்பினர் முன்னெடுத்த முயற்சி வெற்றி பெற்றுள்ளமை கவலைக்குரியது.

இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக ஜனாதிபதி உரிய கவனம் செலுத்த வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்துகிறோம். – என்றார்.






# ஹெரோயின் போதைப்பொருளுடன் கொழும்பு துறைமுகத்தில் கப்பல்

கடந்த வாரம் இலங்கைக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் கைப்பற்றப்பட்ட 250 கிலோ ஹெரோயின் அடங்கிய கப்பலை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் ஆகியன கடந்த புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடச்செய்தன.

இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டபோது அதில் இருந்த ஆறு பாகிஸ்தானிய கடத்தல்காரர்களும் ஒரு ஈரானிய கடத்தல்காரரும் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஏற்கனவே விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் தொகையை பார்வையிடுவதற்காக பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன கொழும்பு துறைமுகத்திற்கு நேற்றுமுன்தினம் சென்றார் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் பல நாள்கள் தொடர் கண்காணிப்பின் பின்னர் இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டது.

கப்பலில் இருந்து 9 உறைகளில் இருந்து 225 போதைப் பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த ஆண்டு மாத்திரம் இலங்கையின் கடற்படையினர் 1,316 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள்களை கைப்பற்றியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் உலகநாடுகளிடம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தல்

அரசியல்கைதிகள் என்ற ரீதியில் கைதுசெய்து தடுத்துவைக்கப்படுபவர்கள் சில சந்தர்ப்பங்களில் அவர்களது இனம், மதம், மொழி, அவர்கள் யாரை நேசிக்கின்றார்கள் என்பன உள்ளடங்கலாக அவர்களது அடையாளத்துக்காக இலக்குவைக்கப்படுகின்றமையுடன் அரசியல்கைதிகளில் சிறுபான்மையினர் பெருமளவிற்கு உள்ளடங்குகின்றார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிளிங்கென், சிறைப்படுத்தப்பட்டுள்ள அரசியல்கைதிகளை விடுதலை செய்வதற்கு அனைத்து உலகநாடுகளும் முன்வரவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரசியல் கைதிகள் தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றுக்கொண்ட இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிளிங்கென், சிறைப்படுத்தப்பட்டுள்ள அரசியல்கைதிகளைவிடுதலைசெய்வதற்கு உலகநாடுகள் முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில்–

அரசியல்கைதிகள் சில சந்தர்ப்பங்களில் அவர்களது இனம், மதம், மொழி, அவர்கள் யாரை நேசிக்கின்றார்கள் என்பன உள்ளடங்கலாக அவர்களது அடையாளத்துக்காக இலக்குவைக்கப்படுகின்றார்கள். குறிப்பாக அரசியல்கைதிகளில் சிறுபான்மையினர் பெருமளவிற்கு உள்ளடங்குகின்றார்கள். சிறைவைக்கப்படும் கைதிகள் சித்திரவதைகளுக்கும் மனிதாபிமானமற்ற முறையிலான நடத்தைகளுக்கும் உள்ளாக்கப்படும் அதேவேளை, அவர்களுக்கான மருத்துவ சிகிச்சைகளும் மறுக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்க



இராஜாங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அண்மைய அறிக்கையின் பிரகாரம் சுமார் 65 இற்கும் அதிகமான நாடுகள் அரசியல்கைதிகளை சிறைப்படுத்தியிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டினார். இவர்களில் பெருமளவானோர் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் முன்னிறுத்திய அவர்களது நாடுகளின் சுபீட்சமான எதிர்காலத்துக்கான சிறந்த நம்பிக்கை வித்துக்களாவர். அரசியல்கைதிகளை சிறைப்படுத்துவதானது ஜனநாயகம் மீதான நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் சீர்குலைக்கின்றது.

எனவேதான் அரசியல்கைதிகள் எங்கு தடுத்துவைக்கப்பட்டிருந்தாலும் உலகநாடுகள் அனைத்தும் அதற்கு எதிரான நிலைப்பாட்டை வெளியிட வேண்டியதும் அவர்களின் விடுதலைக்காக ஒன்றிணைந்து செயலாற்றுவதும் மிகவும் அவசியமாகும் என்றும் பிளிங்கென் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே, அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு அனைத்து நாடுகளிடமும் கோருகின்றோம். எமக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் காணப்படக்கூடிய உறவிற்கு அப்பால், அரசியல்கைதிகளை விடுவிக்க அந்நாடுகள் முன்வரவேண்டும். – என அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி ஜே.பிளிங்கென் தெரிவித்தார்.

# ஆட்சிக் கவிழ்ப்பு எமது நோக்கம் அல்ல நாட்டைப் பாதுகாக்கவே போராடுகிறோம்

## விமல் பதிலடி

அரசியலை நாடகமாகக் கொண்டு செயற்படும் தரப்பினருக்கு, அரசுக்குள் இருந்து கொண்டு நாம் போராடுவது நாடகமாகவே தெரியும். ஏனெனில்அவர்களுக்குநாடகத்தைத் தவிர வேறு எதுவும் தெரியாது, புரியாது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'யுகதனவி' ஒப்பந்தத்துக்கு எதிராக அரச பங்காளிக் கட்சிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அமைச்சரவையில் யுகதனவி உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை வெளிப்படையாகவே அறிவித்தோம். நீதிமன்றம் கூட சென்றுள்ளோம். வெளிப்படையாக எமது எதிர்ப்பை பதிவு செய்கின்றோம். இதுவும் நாடகமென விமர்சிக்கின்றனர்.

ஆட்சியைக் கவிழ்க்க நாம் போராடவில்லை. அதற்கான அரசியல் காய்ச்சலும் எமக்கு ஏற்படவில்லை. நாடு இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது. தாய் நாட்டுக்காகவே போராடுகின்றோம். – எனத் தெரிவித்துள்ளார்.

# நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக சட்டத்தரணிகள் சங்கம் உயர் நீதிமன்றில் ரிட் மனு

வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவாக மாற்றும் விவகாரம் தொடர்பில் நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர் மற்றும் நாணய சபைக்கு எதிராக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் பிரதித்தலைவர் அனுர பி.மெத்தேகொட ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த ரிட் மனுவில் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோரும் மத்திய வங்கியின் நாணயச்சபையும் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளது. இலங்கையில் சட்டத்தரணிகளாகப் பணியாற்றும் சட்டத்தரணிகள் சங்கத்தின் உறுப்பினர்கள் இலங்கைக்கு உள்ளேயும் இலங்கைக்கு வெளியேயும் வசிக்கக்கூடிய சேவைபெறுனர்களுக்கு சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவி சேவைகளை வழங்கி வருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களின் சேவை வழங்கலுக்கு உரிய கட்டணம் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நாணய வடிவில் செலுத்தப்படும் என்று அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஆஸியில் மல்லிகை ஜீவா நினைவு விருது பெறும் கலை, இலக்கியவாதி, எழுத்தாளர் யாழ். பாஸ்கர்

**- முருகபூபதி -**

உள்ளார்ந்த கலை, இலக்கிய ஆற்றல்களை கொண்டிருப்பவர்கள், தமது தாயகம் விட்டு, வேறு எந்தத் தேசங்களுக்கு புலம்பெயர்ந்து செல்ல நேரிட்டாலும், தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியே வருவார்கள்.

அதற்கு எமது புகலிட தமிழ் கலை, இலக்கிய உலகில் சிறந்த உதாரணமாகத் திகழ்பவர்களில் குறிப்பிடத்தகுந்த ஒருவர் எழுத்தாளரும் நாடகக் கலைஞருமான யாழ். பாஸ்கர். இவர் இந்தத் துறைகளில் தடம் பதித்து, வளர்ந்து ஆஸ்திரேலியா நாட்டில் இதழ் ஆசிரியராகவும் மலர்ந்தவர்.


யாழ்ப்பாணம் கொட்டடியைச்சேர்ந்த இவர், தனது ஆரம்பக்கல்வியை கொட்டடி நமசிவாயா பாடசாலையிலும், நவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையிலும் பயின்று, பின்னர் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் இணைந்தார்.

கல்வியை நிறைவுசெய்துகொண்டு, 1984 ஆம் ஆண்டிலேயே கடலைக் கடக்கத் தொடங்கியவர். இவர் ஒரு கிரேக்க கப்பலில் வேலைக்குச்சேர்ந்து சமுத்திரங்கள் பலவற்றை கடந்து பயணித்திருப்பவர்.

இவர் சென்று திரும்பிய தேசங்களின் பெயர்களே சற்று நீளமானது. கடலோடியாக அமெரிக்கா, மெக்சிக்கோ, ஆர்ஜன்டைனா, நைஜீரியா, போலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி என சுற்றியலைந்து விட்டு, இறுதியில் 1988 ஆம் ஆண்டளவில் இந்தியாவை வந்தடைந்தவர்.

இலங்கையில் போர் மேகங்கள் சூழ்ந்திருந்த அக்காலப்பகுதியில் தாயகம் திரும்பாமல், கடல் வாழ்க்கை இனிப் போதும் எனக்கருதியதனாலோ என்னவோ, ஆஸ்திரேலியாக் கண்டத்திற்கு நிரந்தரமாக வந்து சேர்ந்தார்.

யாழ். பாஸ்கர், ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் ம. பாலசிங்கம் அவர்களின் மருமகனும், பிரான்ஸில் வதியும் எழுத்தாளர் கலா. மோகன், டென்மார்க்கில் வதியும் இலக்கியவாதியும் மொழிபெயர்ப்பாளரும் அரசியல் பிரமுகருமான டென்மார்க் தருமகுலசிங்கம் ஆகியோரின் நெருங்கிய உறவினருமாவார்.




1989 நடுப்பகுதியில் எனது சமாந்தரங்கள் கதைத் தொகுதியின் வெளியீட்டு விழா மெல்பனில் நடைபெற்ற காலப்பகுதியில், அதில் உரையாற்றுவதற்கு சிட்னியிலிருந்து வருகை தந்த எழுத்தாளர் எஸ். பொ. அவர்களினால், எனக்கு அறிமுகமானவர்தான் யாழ். பாஸ்கர்.

அன்று முதல் கலை இலக்கியவாதியாகவும் இதழாசிரியராகவும் தன்னை படிப்படியாக வளர்த்துக் கொண்டார். இயல்பிலேயே கலை ஆர்வம் மிக்கவர் என்பதை அக்காலப்பகுதியிலேயே இனம் காண முடிந்தது.

எனது நண்பர் இராஜரட்ணம் சிவநாதன் அங்கம் வகித்திருந்த மெல்பன் தமிழ்க்கலை மன்றம், அவ்வேளையில் மெல்பன் பார்க்வில் பல்கலைக்கழக உயர்தரக் கல்லூரியில் கலைமகள் விழாவை நடத்தியது.

அதற்கு குவின்ஸ்லாந்து மாநிலத்திலிருந்து இலங்கை வானொலியில் முன்னர் பணியாற்றிய கலைஞரும் பிரிஸ்பேர்ண் தமிழ் ஒலி வானொலி ஊடகவியலாளருமான சண்முகநாதன் வாசுதேவனின் தலைமையில் நாம் கவியரங்கும் நடத்தினோம்.

யாழ். பாஸ்கர் கலைஞனின் கண்ணீர் என்ற நாடகத்தின் பிரதியை வைத்திருந்தார். அது ஒரு வரலாற்று நாடகம். அதில் வரும் சிற்பியின் பாத்திரத்தை ஏற்று திறம்பட நடித்தார். அதன்பின்னர் பண்டாரவன்னியன், மாவை நித்தியானந்தனின ஐயா லெச்சன் கேட்கிறார், எஸ். பொவின் வலை முதலான நாடகங்களிலும் முருகபூபதி, அருண். விஜயராணி, பாடும் மீன் சு. ரீகந்தராசா, கண்ணன் ஆகியோரின் நாடகங்களிலும் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார்.

மெல்பன் திருமறைக்கலாமன்றத்தின் ஏற்பாட்டில் அரங்கேறிய கடன்பட்டார் நெஞ்சம் என்ற கூத்திலும் இடம்பெற்



றார்.

இவ்வாறு மெல்பனில் தமிழ் நாடகக் கலைக்கு உயிர்ப்பூட்டி வந்த யாழ். பாஸ்கருக்கு தாமும் ஒரு இலக்கிய சிற்றிதழை நடத்தவேண்டும் என்ற எண்ணம்1989 இலேயே மனதில் உதித்தது.

எஸ்.பொவிடமும் ஆலோசனை கேட்டார். அவரை பிரதம ஆலோசகராகவும் டென்மார்க்கிலிருந்து தர்மகுலசிங்கம், தமிழ்நாட்டிலிருந்து இளம்பிறை எம். ஏ. ரஹ்மான், ஆகியோரை துணை ஆசிரியர்களாகவும் இணைத்துக்கொண்டு அக்கினிக்குஞ்சு இதழை ஆரம்பித்தார்.

முதல் இதழ் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியானது. தமிழ்நாட்டில் கோடம்பாக்கத்தில் இவ்விதழ் அச்சாகி வெளிவந்தது. மெல்பனில் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இவ்விதழின் வெளியீட்டு அரங்கு மொறாபீன் சமூக மண்டபத்தில், பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி காசிநாதர் தலைமையில் நடந்தது. இந்த அரங்கில் எஸ்.பொ., முருகபூபதி, அருண். விஜயராணி, மாவை நித்தியானந்தன், விக்ரோரியா இலங்கைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் மருத்துவர் இராஜன் இராசையா, சட்டத்தரணி செ. ரவீந்திரன் ஆகியோர் உரையாற்றினர்.

முதல் இதழ் மகாகவி பாரதியின் அட்டைப்படத்துடன் வெளியானது. தொடர்ந்தும் தமிழ்நாட்டிலிருந்தே அக்கினிக்குஞ்சு அச்சாகி வெளிநாடுகளுக்கு பறந்தது.

எஸ்.பொ. இதில் கொண்டோடி சுப்பர், அபிமன்யூ முதலான புனைபெயர்களில் அரசியல், இலக்கிய தொடர்களும் எழுதினார். தரமான சிறுகதைகளும் வெளிவந்தன. யாழ். பாஸ்கர் மனம்விட்டுப் பேசுவோம் என்ற தலைப்பில் ஆசிரியத் தலையங்கங்களை வரவாக்கினார்.

தமிழ்நாட்டில் அச்சமயம் தினமணி




பத்திரிகையில் பணியாற்றிய மூத்த பத்திரிகையாளர் எஸ். எம். கார்மேகம் சென்னைக் கடிதம் என்ற தலைப்பில் தமிழக புதினங்களை தொடர்ந்து எழுதினார்.

கவிஞர் அம்பி, அக்காலப்பகுதியில் பப்புவா நியுகினியிலிருந்தார். அவரது இரண்டு உலகம் என்ற கவிதைத் தொடருக்கும் அக்கினிக்குஞ்சு களம் வழங்கியது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள் மு. தளையசிங்கம், வ. அ. இராசரத்தினம் , கே.வி. நடராஜன், இலங்கையர்கோன், மாத்தளை சோமு, முருகபூபதி , யாழ்ப்பாணம் நெல்லியடியில் நிகழ்ந்த எறிகணை வீச்சில் குடும்பத்துடன் பலியாகிப்போன எழுத்தாளர் நெல்லை க. பேரன், சீன இலக்கிய மேதை லூசூன் உட்பட சிலரது சிறுகதைகளும் தமிழக கவிஞர் எஸ். வைத்தீஸ்வரனின் கவிதைகளும் அக்கினிக்குஞ்சு இதழில் இடம்பெற்றன. பத்தி எழுத்துக்கள் பலவும் இதில் வெளியாகின.


அச்சமயம் லண்டனிலிருந்து பேராசிரியர் சிவசேகரம் எழுதிய எதிர்வினைகளும் பதிவாகின.

முதலில் தமிழ்நாட்டிலிருந்தும், பின்



னர் ஆஸ்திரேலியாவிலிருந்தும், இவ்விதழை யாழ். பாஸ்கர் தொடர்ந்து வெளியிட்டாலும், வழக்கம் போன்று சிற்றிதழ்களுக்கு நேரும் நெருக்கடியை இவரும் சந்தித்தார். அதனால் சிறிது காலம் அதன்






வருகை தடைப்பட்டது.

எனினும், எவ்வாறாயினும் மீண்டும் அக்கினிக்குஞ்சுவை வெளியிடவேண்டும் என்ற எண்ணம் இவரது மனதில் அக்கினிக்குஞ்சாகவே கனன்று கொண்டு தானிருந்தது.

கணினியின் தீவிரப் பாய்ச்சலையடுத்து, அக்கினிக்குஞ்சை பத்தாண்டுகளுக்கு முன்பே இணைய இதழாக்கினார்.


கலை, இலக்கியம், சமூகம், பொருளாதாரம், சுற்றுச்சூழல், அரசியல், சினிமா, ஆன்மீகம், வரலாறு உட்பட பல துறைகள் சார்ந்த ஆக்கங்களுக்கும் இவ்விணைய இதழில் களம் வழங்கி வருகிறார்.

ஆஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, கனடா உட்பட ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஆக்க இலக்கியவாதிகளுக்கு சிறந்த களம் வழங்கி வரும் யாழ். பாஸ்கரின் அயராத உழைப்பு விதந்து போற்றுதலுக்குரியது.

சிறுகதைகள், தொடர்கதைகள், கவிதைகள், தொடர் கட்டுரைகள் என்பனவற்றுக்கு யாழ். பாஸ்கரின் அக்கினிக்குஞ்சு சிறந்த களம் வழங்கி வருகின்றது.

இலங்கை உட்பட புகலிட படைப்பாளிகள் பங்கேற்ற மெகா தொடரான விழுதல் என்பது எழுகையே அக்கினிக்குஞ்சு இணைய இதழிலும் வெளியானது.

(11ஆம் பக்கம் பார்க்க)



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்விழி நயனம்

# நீ உன்னை அறிந்தால்...



வாழ்க்கையில் ஒருவர் முன்னேற வேண்டும் என்று நினைப்பது மனித இயல்பு. ஒருவர் வாழ்வதற்கு பலவகையான வாழ்க்கை முறைகளை மனித நாகரிகங்கள் கற்றுத்தந்துள்ளன, கற்றுத் தந்துகொண்டும் இருக்கின்றன. ஒவ்வொரு வாழ்க்கை முறையிலும் பல படிமுறைகளையும் அனுபவங்களையும் கடந்தும் அடைந்தும் வாழ்க்கையை ஒருவர் வாழ்கிறார். அவர் நல்லமுறையில் வாழ்கிறாரா அல்லது நல மற்ற முறையில் வாழ்கிறாரா என்பது அவர் தன்னை எவ்வாறு அவ்வாழ்க்கைக்குத் தயார் பண்ணுகிறார் என்பதைப் பொறுத்து அமைகிறது. அப்படியாக ஒருவர் தன்னைத் தயார் செய்வது என்பது அவருடைய பாலர் பருவத்திலேயே ஆரம்பமாகி, அவரின் இறுதி மூச்சுவரை தொடரும் என்பதே கண்கூடு. பாலர்பருவம், பள்ளிப்பருவம் போன்ற நிலைகளிலே அவரின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் உறுதுணையாக நின்று ஒருவரைத் தயார்செய்வார்கள். இந் நிலைகளுக்குப் பின் ஒருவர் தன் வாழ்வை வாழ்வதற்கு தன்னைத்தானே தயார் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றார் என்பது அனுபவபூர்வமான உண்மை. இங்கேதான் ஒரு மனிதனின் தடுமாற்றம் ஆரம்பமாகின்றது. இத்தடுமாற்றத்தில் சிக்கித்தவிப்போரும் உண்டு, மறுபக்கம் சிறப்பாக அச்சிக்கலைக் யையாண்டு வெற்றி பெறுவோரும் உண்டு. ஆனால் எல்லாரும் வெற்றிபெறவேண்டும் என்பதே நோக்கமும் பிரார்த்தனையாகும் என்பதனை மறுக்க முடியாது.

இவ்விதமான வாழ்க்கைப் போராட்டத்தை மனித குலத்தின் ஆன்மீக, அறிவியல் பயணத்தின் ஒரு கூறாகவே ஆன்மீக ஞானிகளும், அறிவியல் ஆசான்களும் எடுத்துக் கொள்கிறார்கள் என்பது அவர்களுடைய வாழ்க்கைவரலாறுகளைப் படிக்கும்பொழுது உணரக்கூடியதாக இருக்கின்றது. முக்கியமாக அவர்கள் தம்மைத் தயார் செய்யும்போது மிகக்கடுமையான சுயஆய்வை மேற்கொள்கிறார்கள். தங்களைப் பல வழிகளிலே, பல முறைகளிலே, பல தளங்களிலே ஆய்ந்து ஒரு முடிவை எடுக்கிறார்கள் என் பதனை பல வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன.

அண்மையிலே சேக்கிழார் பெருமான் எழுதிய பெரியபுராணத்தை படிக்கவேண்டும் என்ற அவா மேலெழ அதைப் படிக்கத் தொடங்கினேன். உங்கள் எல்லோருக்கும் பெரியபுராணம் உருவான வரலாறு தெரிந்து இருக்கும் என உணருவேன். முதல் பகுதியிலே சேக்கிழார் பெருமானின் பணிவும், நிறை பண்பும், இறைவன் மீதுள்ள கொண்ட ஐயமில்லா நம்பிக்கையும், முக்கியமாக அவர் தன்னைத்தான் அறிந்து கொள்ள எடுத்துக்கொண்ட பிரயத்தனமும் என்னை பிரமிக்க வைத்தன. சேக்கிழார் சோழ இராச்சியத்தின் முதல் மந்திரி. எத்தனை பெரிய பொறுப்புள்ள பதவி, அப்பதவியை அலங்கரிப்பவர் எவ்வளவு அறிவாளியாகவும், அனுபவசாலியாகவும், ஆற்றல் மிக்கவராகவும் அதிகாரமுடையவராகவும் இருந்திருப்பார் என்ற சிந்தனையை உங்கள் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். அப்பேற்பட்ட ஒரு பெரியவரின் மனம் இப்பெரிய புராணத்தை எழுதவேண்டும் என்றவுடனே தள்ளாடுகிறது, பயப்படுகிறது, அங்கலாய்க்கிறது, தனக்கிருக்கும் ஆற்றல் போதுமானதா என்று தயங்குகின்றது. எத்தனை சிவனடியார்கள், இறைவனின் எத்தனை திருவிளையாடல்கள், எத்தனை உபதேசங்கள், இன்னும் எத்தனையோ விடயங்கள், எவற்றை உள்ளடக்குவது என்று அவரின் மனம் சிந்திக்கிறது. அவர் தன்னைத்தானே சுயஆய்வுக்கு உட்படுத்துகிறார். அந்த ஆய்வின் உச்சத்திலே இறைவன் அடியெடுத்துக் கொடுத்தது மட்டுமல்ல வழிசமைத்துக் கொடுத்தார்.

அந்தவகையிலே தன்னிலையை சேக்கிழார் பெருமான் கீழ்வரும் பாடலிலே தெரியப்படுத்துகிறார் என்று எண்ணத் தோன்றுகிறது.

*அளவி லாத பெருமைய ராகிய*
*அளவி லாஅடி யார்புகழ் கூறுகேன்*
*அளவு கூட உரைப்பரி தாயினும்*
*அளவில் ஆசை துரப்ப அறைகுவேன்*

அதாவது, யாராலும் அளப்பதற்கு இயலாமல் உள்ள உயர்ந்த பெருமைகளையுடைய, எண்ணிக்கொள்ள முடியாமலுள்ள, பல தொண்டர்களின் பெருமைமிக்க திருத்தொண்டுகளை கூறுவதற்கு தலைப்பட்டுள்ளேன். அத்திருத்தொண்டுகளை அளவுசெய்து சொல்லும் ஆற்றல் எனக்குள்ளதா என்றால் இல்லையென்றே கூறுவேன். அப்படியிருப்பினும் அந்த அற்புதமான வரலாறுகளைச் சொல்ல வேண்டும் என்று ஏற்பட்ட அளவுகடந்த ஆசையின் காரணமாக, இவ்வரலாறுகளை ஒருவாறு சொல்லத் தலைப்படுகின்றேன். அதற்கு இறைவன் அருள்புரிவாராக என்று இப்பாடலில் சொல்கிறார்.

தன்னால் எது முடியும், எது முடியாது என்பதனை அவர் தெளிவாகப் புரிந்துள்ளார் என்பதை இப்பாடல் அடிகளில் இருந்து விளங்கிக்கொள்கிறோம். இந்தப்பாடலை பாடமுன்பு, சேக்கிழார் பெருமான் எவ்வளவு ஆய்வுசெய்திருக்க வேண்டும், எவ்வளவு தகவல்களை திரட்டி இருக்கவேண்டும், திரட்டிய தகவல்கள் உண்மையா என் பதனை திறனாய்வு செய்திருக்கவேண்டும். இவையெல்லாவற்றுக்கும் மேலாக உரைப்பது அரியதாயினும் என்ற சொற்றொடர் அவர் தன் தகைமை ஆய்வுசெய்ய கூறிய கூற்றாகக் கொள்ளலாம். சேக்கிழார் பெருமான் தன்னை சுயஆய்வு செய்து இறைதிருவருளோடு உருவாக்கிய பெரிய புராணம் இன்று சைவ உலகின் ஈடு இணையில்லா வேதமாகவும், நெறிநூலாகவும், தத்துவமாகவும் உயர்ந்து நிறைந்துள்ளது. இவ்வாறாக, சுயஆய்வு என்பது ஒருமனிதனின் வளர்ச்சியிலும், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியிலும் ஒரு நாட்டின் வளர்ச்சியிலும், அதற்கும் மேலாக ஆன்மீக வளர்ச்சியிலும் இன்றியமையாத ஒரு கருவி, ஒரு திறன், ஓர் ஒழுங்குமுறை.

# ஏகபாதாசனம்



வாரம் ஓர் ஆசனம்

**செய்(படி)முறைகள்:**

1. நேராக நிமிர்ந்தவாறு நிற்கவும். (தடாசனம்)

2. இடது காலை தூக்கி குதிக்கால் குதத்துடன் பொருந்தியவாறு, இடப்பாதமானது வலக்கால் தொடையுடன் அழுத்தியவாறு வைக்கவும். விரல்கள் கீழ் நோக்கியவாறிருத்தல் வேண்டும்.

3. இரு கைகளையும் கூப்பியவாறு நெஞ்சுடன் பொருத்தி வைத்து பின்னர் மூச்சினை உள்ளிழுத்தவாறு கைகளை தூக்கி தலைக்கு நேராக உயர்த்தல் வேண்டும். புயங்கள் இரண்டும் காதுகளுடன் சேர்ந்திருக்க வேண்டும். இதன் உச்ச நிலையில் 3 நிமிடங்கள் வரை நின்று சுவாசிக்கலாம்.

4. மூச்சை வெளிவிட்டவாறு இரு கைகளையும் கூப்பியவாறு நெஞ்சிற்கருகாக கொண்டு வரவும்.

5. கை, கால்களை கீழிறக்கி தளர்த்தி விட்டு ஆரம்ப நிலைக்கு வரவும்.

**குறிப்பு : இதே போல் மாற்றுப் பயிற்சியாக மறுபுறமாகவும் (இடக்கால்) செய்தல் வேண்டும். ஒவ்வொரு பக்கமும் தலா ஒரு தடவை செய்தால் போதுமானது.**

**பயன்கள்:**

முதுகுத் தண்டு வடம், கால்கள் வலிமை பெறும், உடல் சமநிலையை பேணுவதுடன் கண், காது சம்பந்தமான பிரச்சினைகள் நீங்கும். கால் தசைகள், நரம்புகள், இடுப்பு, கணுக்கால் முழங்கால் மூட்டுக்கள் தோள்கள் பலமடைகின்றன. தலைப்பகுதிக்கு அதிகளவு இரத்தம் செல்வதால் தலைசுற்று, மயக்கம், தலைவலிகள், வலிப்புகள் நீங்கி மூளை சுறு சுறுப்படையும். ஞாபகசக்தி கூடுவதுடன் இதய, சுவாச நோய்கள் குணமாகும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன –தனதான
திரிபுரம தொருநகையி லெரியரனி னிடமுறையு
சிவையருளுமை கரமருளு –வடிவேலா
திரிபுவன முழுதுமுள பெருபயம தகலவுன
திருவருளை நிதமுமுற –அருளாயோ?
பரிதியென ஒளருமுன திருவருளு முகவடிவை
பரிவினொடு துதிபுரிய –அருள்பாலா
படையதனை தருபுலவ னமுதநிலை கருதியவன்
பகையழியு வகைகுகையை –அழிசுரா
அரியதமி ளொடுஉனது அடிமலரை தொழுதுகவி
அளியடிய னுயரருளை –பொழியாயோ?
அறிவதுவு முரைமதுர மொழியதுவு மழியஉயிர்
அலமலரு பொழுதுமயில் –மிசைவாராய்
அரியினொடு அயனவனு மறிவரிய பதமலரை
அறியுமறி வதனையுறு –நிலைதாராய்
அபயமொடு வரமருளு வரதகர மொடுதிகழு
அழகுறுநல் லையினிலுறை –பெருமானே!

**- கவிஞர் குகதாசன் -**



# சீனா அரவணைப்பா? ஆக்கிரமிப்பா?

ந.லோகதயாளன்

‘நக்குண்டார் நாவிழந்தார்’ என்ற பழமொழியைத் தமிழர்கள் மறக்கவில்லை. அது தெரிந்தும் சீனாவுடன் ஒட்டும் நிலைமை வலிந்து திணிக்கப்படுகின்றது.

சீனாவும் தூசு தட்டி எடுத்து எரியும் நெருப்பில் எண்ணை ஊற்ற முயலும் நடவடிக்கையில் தற்போது ஈடுபடுகின்றது.

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள்



எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்டு வடக்கு மாகாண மீனவர்களின் கடல் வளத்தை அழிப்பது மட்டுமன்றி மீனவர்களின் தொழில் உபகரணங்களையும் அழிப்பது தொடர்பில் இலங்கை மீனவர்கள் உச்ச சினம் கொண்டுள்ளனர். இதனை எவ்வாறேனும் தீர்த்து விட வேண்டும் அல்லது தீர்வை முன்வைத்து விட வேண்டும் என சிலர் முயன்றாலும் அது சுலபமான காரியமாகவும் தென்படவில்லை.

**சந்தர்ப்பத்தை பயன்படுத்த காய் நகர்த்தும் சீனா**

இதனை நன்கு அறிந்த தரப்புக்கள், தமக்கு இருக்கும் அரசியல் பலத்தின் ஊடாக எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றினால் நெருப்பு கொழுந்து விட்டு எரியும்போது சுகமாக குளிர் காயமுடியும் எனக் கருதிக் கருமமாற்றுகின்றனர். அதன் மூலம் ஒரு கல்லில் பல மாங்காய் தேடலாம் எனக் கன கச்சிதமாக கணக்கிட்டனர்.

அதற்காக செயலிலும் இறங்கி விட்டதன் வெளிப்பாடே யாழ்ப்பாணம், மன்னார் மீனவர்களிற்கு சீனாவின் நிவாரண உதவிகளா என்ற கேள்வியும் எழுகின்றது.

**மக்களின் அவலத்தில் இராஜதந்திரமா?**

எமது மக்களை பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டு விரக்தி நிலையில் அவர்கள் இருக்கும்போது எவர் ஒருவர் கை நீட்டினாலும் அதனை பற்றி மேல் எழ வேண்டிய தேவை தவிர்க்க முடியாத கட்டாயமாக அவர்களுக்கு உள்ளது. அது சீனாவாக இருந்தால் என்ன, சீயன்னாவாக இருந்தால் என்ன, அதனைப் பெறவேண்டிய இக்கட்டு உள்ளது.

ஆனால் மக்கள் அதிகாரிகள் போன்றோ அல்லது அரசியல்வாதிகள் போன்றோ இந்தியாவையும் சீனாவையும் ஒரே நேரத்தில் திருப்திப்படுத்த வேண்டும் என எண்ணுபவர்கள் அல்லர்.

உதவி தருவது இந்தியத் தரப்பாகவோ ஏன் சீனா அல்லது பாகிஸ்தான் தரப்பாகவோ இருப்பது கூட பிரச்சினை இல்லை, ஆனால் எல்லாரிடமும் நல்ல பிள்ளை என பெயர் எடுப்பதற்காக இங்கு சிலர் போட்டுக்கொடுக்கும் செயலில் இறங்குவதுதான் வேடிக்கையானது.

**பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் அரசியல்**

15ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த சீனாவின் தூதுவரது நிகழ்ச்சி நிரலை கையாளும் பொறுப்பு கொழும்பு அரசால் வடக்கு மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலைத் தயாரித்த ஆளுநர் அந்தப் பட்டியலை பின்கதவால் முதலில் நீட்டியது இந்தியத் தூதரகத்திற்கே என்ற தகவலும் மெல்லக் கசிந்துள்ளது.

இதன் பின்பே உள்ளூர் அரச அதிகாரிகளிற்கும் அரசியல்வாதிகளிற்கும் அது வழங்கப்பட்டதாம்.

இந்த நிலைமையை அறியாத யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனும் தனது பங்கு விசுவாசத்திற்கு, இரவு உணவு நிகழ்ச்சி விடயத்தை யாழ்ப்பாணத் தூதரகத்தின் காதில் போட்டு வைத்தார் என்றும் தகவல்.

சீனத் தூதரின் யாழ்ப்பாண நூலக விடயம் திட்டமிடப்பட்டதும் யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும் தன் பங்கிற்கு விசுவாசத்தைக் காட்ட முந்திக் கொண்டார். ‘ஐயா எம்மை மன்னித்து விடுங்கள், சீனாவின் தூதுவர் பிரதான நூலகத்தைப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டதனால் நூலகத்திற்கு வருகின்றார். மன்னித்துக் கொள்ளுங்கள். இதன் ஏற்பாடு முழுமையாக ஆளுநர்தான். எமக்கு பிரதம செயலாளர் ஊடாக அறிவித்துள்ளார். அதனால் செய்கிறோம்’ என யாழ்ப்பாணம் மாநகர முதல்வரும் தனது பங்கிற்கு இந்தியத் தூதரகத்திடம் ஒப்புவித்தார்.



இந்தநேரம் இந்தியா என்ன எண்ணியிருக்கும்? ஆகா என்னவொரு விசுவாசம், நமக்கு வாய்த்த ஏவலர்கள் அத்தனைபேரும் சரியாக பணியாற்றுகின்றனர் என நகைத்தனரோ யாம் அறியோம்.

இந்த நிலைமையிலே சீனாவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், மன்னார் மீனவர்களிற்கு நிவாரணப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இதிலே யாழில் 800 மீனவர்களிற்கு வலையும், 2 ஆயிரம் மீனவர்களிற்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இதேநேரம் மன்னார் மாவட்ட மீனவர்கள் 700 பேருக்கு நிவாரணப் பொதிகளும் 150 பேருக்கு வலைகளும் வழங்கப்பட்டன.

இதற்கான ஏற்பாடுகள் கடற்றொழில் அமைச்சினால் செய்யப்பட்டன மாதிரித் தெரியவில்லை. அவ்வாறானால் யார் செய்தனர் என்ற பெரும் கேள்வியும் உள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட நிவாரண வலைகள் தலா 8 ஆயிரம் ரூபா பெறுமதியும் நிவாரணப் பொதிகள் தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியும் உடையவை எனக் கூறப்படுகின்றது. இங்கேதான் அடுத்த கட்ட இராஜதந்திரம் கையாளப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் தீவுகளில் சீனத் தரப்பு 2 ஆண்டுகள் நின்று ஓர் திட்டத்தைத் தயாரித்து வழங்கிவிட்டுச் செல்வதற்கே கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட நிலையில், இப்போது தீவுகளில் நிரந்தரமாகப் பண்ணை அமைப்பதற்கு சீனாவின் நிறுவனங்களிற்கு இடம் வழங்கினாலோ அல்லது எதிர்காலத்தில் வடக்கில் கால் ஊன்ற நினைக்கும் சீனாவின் செயல்பாடுகளுக்கோ எதிர்ப்புத் தெரிவிக்காமல் மௌனிகளாக இருக்க வேண்டும் என சீனத் தூதரகம் எண்ணி இத்தாராளத்தை அள்ளிவழங்குகின்றதோ என்ற கேள்வி எழுகிறது.

(11ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கின் மூன்று தீவுகளை சீனாவுக்கு வழங்கும் நோக்கம் அரசுக்கு இல்லை

## பாதுகாப்பு அமைச்சு செயலர் திட்டவட்டம்

வடக்கின் மூன்று தீவுகளை சீனாவுக்கு கொடுக்கும் எந்தவித நோக்கமும் எமது அரசாங்கத்திடம் இல்லை, ஆனால் முதலீடுகளின் போது சர்வதேச நாடுகளைத் தெரிவு செய்யும் வேளையில் தெரிவாவது சீன நிறுவனம் என்றால் அதனை எவரும் தவறான விதத்தில் விமர்சிக்கக்கூடாது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

சர்வதேசநாடுகளுடன் முன்னெடுக்கும் உடன்படிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்றால் அதனை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி அனுமதிக்கமாட்டார் எனவும் கூறினார்.

கடந்த ஈராண்டு காலத்தில் முப்படையினரின் செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கும் விதமாக ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன இதனைக் கூறினார்.

# மட்டு. மாநகரசபை ஆணையாளர்களாக ஒரே நாளில் இரண்டு பேர் பதவியேற்பு!

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராக ஒரே நாளில் காலையிலும், மாலையிலும் இரு ஆணையாளர்கள் சம்பிரதாய பூர்வமாக கடந்த புதன்கிழமை தமது பதவிகளைப் பொறுப்பேற்று கொண்டமையையடுத்து ஒரே நாளில் இருவர் ஒரே பதவிக்கான கடமையை பொறுப்பேற்ற வரலாற்றுச் சாதனை இடம்பெற்றுள்ளது.

மாநகரசபை ஆணையாளராகக் கடமையாற்றி வந்துள்ள எம்.தயாபரனுக்கு பதிலாக புதிய ஆணையாளராக பொறியியலாளர் ந.சிவலிங்கம் ஆணையாளராக கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு அவர் புதன் காலையில் தனது கடமைகளை சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதனையடுத்து பிற்பகல் புதிய ஆணையாளராகக் கடமைகளைப் பொறுப்பேற்ற பொறியியலாளர் ந.சிவலிங்கத்துக்கு பதிலாக மீண்டும் முன்னாள் ஆணையாளர் எம். தயாபரன் கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டு அவர் தமது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளராக எம்.தயாபரன் நியமிக்கப்பட்டு இரண்டு வருடங்களாக கடமையாற்றி வருகின்றார்.

இந்த நிலையில் மாநகரசபை முதல்வருக்கும் மாநகரசபை ஆணையாளர் தயாபரனுக்கும் இடையே மாநகரசபை செயற்பாட்டில் முரண்பாடு ஏற்பட்டது. இதனையடுத்து ஆணையாளருக்குச் சபையால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பல சபையால் மீளப் பெறப்பட்டன.

அதனைத் தொடர்ந்து முதல்வருக்கும்,ஆணையாளருக்கும் இடையே தொடர்ந்த முறுகல் நிலையையடுத்து ஆணையாளருக்கு எதிராக மாநகரசபை முதல்வர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் தொடர்ந்த நிலையில் ஆணையாளருக்கு எதிராக நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியிருந்தது.

தொடர்ந்து ஆணையாளர் நீதிமன்ற தடை உத்தரவை மீறிச் செயற்படுகிறார் என நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஒன்றை மாநகர சபை முதல்வர் மட்டக்களப்பு உயர் நீதிமன்றில் தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த பொறியியலாளர் ந.சிவலிங்கம் புதிய ஆணையாளராக நியமிக்கப்பட்டமையையடுத்து அவர் மாநகரசபை முதல்வர் ரி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன மற்றும் பிரதி ஆணையாளர் உ. சிவராயா மற்றும் மாநகரசபை உறுப்பினர் முன்பாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

பின்னர் பிற்பகல் புதிய ஆணையாளராகப் பதவி ஏற்றுக் கொண்டவருக்குப் பதிலாக மீண்டும் ஆணையாளராக எம்.தயாபரன் கிழக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்டமையையடுத்து அவர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்.

# சிறிமதனை வீதியில் வழி மறித்து புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளரான கனகலிங்கம் சிறிமதனை வவுனியா குடியிருப்பு பகுதியில் வழிமறித்த பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவினர் (சி.ஐ.டி.) அரை மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் செயலாளர் க.சிறிமதன் தனது வீடு நோக்கி வவுனியா நகரில் இருந்து குடியிருப்பு வீதி வழியாகச் செல்லும் போது இரவு 6.30 மணியளவில் குடியிருப்பு பகுதியில் மோட்டார் சைக்கிளில் தரித்து நின்ற சிவில் உடை தரித்த நால்வர் வழிமறித்துள்ளனர்.

பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறி தம்மை அடையாளப்படுத்தி வீதியில் வைத்து அரை மணிநேரம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது கடந்த 10 ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்கான காரணம்? அந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தவர்கள் யார்? ஒழுங்கமைத்தவர்கள் யார்? மற்றும் தற்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனால் மேற்கொள்ளப் படும் வேலைகள் தொடர்பில் தன்னிடம் தகவல்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், தான் தொடர்ந்தும் பயணிக்க அனுமதிக்கப்பட்டேன் என க.சிறிமதன் தெரிவித்துள்ளார்.

மேலும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் க.சிறிமதன் 2018 ஆம் ஆண்டு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரராஜாவின் செயலாளராக கடமையாற்றிய போதும் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீனா அரவணைப்பா?...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

### சீனாவிற்கு இடமளிப்பதும் ஒட்டகத்திற்கு இடம் வழங்குவதும் ஒன்று

இந்திய மீனவர்கள் அத்து மீறுகின்றனர் அல்லது எமக்கு நட்டத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதற்காக, அந்த விடயத்தை ஏற்க முடியாதபோதும், அதற்காக சீனாவிற்கு தலையாட்டினால் அது ஒட்டகத்திற்கு இடமளித்தமைக்கு அல்லது குளிருது என்பதனால் கரடியைக் கட்டிப் பிடிப்பதற்கு நிகரானது என்பதனை தமிழர்கள் நன்கறிவார்கள்.

இதற்கு மற்றுமோர் உதாரணம் உகண்டா. அந்த நாட்டிற்கு கடனை அள்ளிக் கொடுத்துவிட்டு, அந்தக் கடனை உகண்டா திரும்பச் செலுத்தவில்லை என்றபோது அந்த நாட்டின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையத்தையே சீனா சுவீகரிக்கும் நிலைமையில் உள்ளது.

அதாவது மணியின் ஓசை கேட்கும்போது நல்லாத்தான் இருக்கும். அது எதற்காக அடிக்கப் படுகின்றது என்பதே முக்கியம். ஏனெனில் யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதுதான் சிக்கல்.

### சீனாவிற்கு முன்பு தீவுகளை பார்த்த ஆளுநர்

யாழ்ப்பாணத்திற்கு 2021-12-15 அன்று சீனாவின் தூதுவர் யாழ்ப்பாணம் வருவதற்கு முன்பே இதன் ஓர் அங்கமாக 12 ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா காங்கேசன் துறையில் இருந்து கடற்படையினரின் வோட்டர் ஜெற் மூலம் அனலைதீவிற்கு ஓர் பயணத்தை மேற்கொண்டிருந்தார். இதே அனலைதீவின் அருகில் ஓர் ஆள் இல்லாத தீவு இரு ஆலயங்களுடன் உள்ளது. அந்த தீவு புளியந்தீவு எனப்படுகின்றது.

இந்த தீவிற்கும் அனலைதீவிற்கும் இடையில் 300 மீற்றர் தூரம் உள்ளது. அனலைதீவில் இருந்து புளியந்தீவிற்குச் செல்வதற்கு தரைத் தொடர்பும் உண்டு. இந்த தீவே சீனத் தரப்புக்கு வழங்கப்படலாம் என தற்போது செய்திகள் வெளிவரும் நிலையில் இதனை உறுதிப்படுத்தும் வகையில் கொழும்பு உட்பட நாட்டின் முக்கியமான பிரதேசங்களில் உள்ள சுமார் 50 காணிகளை அபிவிருத்தித் திட்டங்களுக்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு வழங்க இலங்கை அரசு தீர்மானித்துள்ளது என்று செய்திகள் வெளியாகியுள்ளன. மொத்தம் அறுநூறு கோடி அமெரிக்கா டொலர் மதிப்பிலான ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வரையப்பட்டுள்ளன என்று சிங்கள மொழி ஊடகமான ‘அத தெரண’ தெரிவித்துள்ளது. கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, போகம்பரை, நுவரெலியா, குருநாகல், யாழ்ப்பாணம், வவுனியா, மற்றும் அனுராதபுரம் பிரதேசங்களில் உள்ள காணிகளும் இதில் அடங்குகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யுஏஈ), இந்தியா, மலேசியா மற்றும் சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு முதலீட்டாளர்களும், உள்ளூர் முதலீட்டாளர்களும் ஏற்கனவே திட்டங்களில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டியுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

தற்போது இலங்கை அரசு எதிர்கொண்டு வரும் டொலர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காகவே காணிகளை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ் வந்த சீனத் தூதுவர் 15 ஆம் திகதி இரவு இடம்பெற்ற தேநீர் விருந்தில் கலந்துகொண்டவர்களிடம் நாம் தீவுகளில் இடம் பெறும் திட்டங்களைக் கைவிட்டதான தகவல் தவறானது எனத் தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனம் என கடற்றொழில் அமைச்சர் கூறிய அரியாலையில் உள்ள குய்லன் நிறுவனத்திற்கும் சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் பயணித்தனர். இந்த நிறுவனமே அரியாலையில் கடல் அட்டை குஞ்சு பண்ணை நடாத்தும் அதே நேரம், அனுமதியின்றி பூநகரி கௌதாரிமுனையில் கடல் அட்டைப் பண்ணை அமைத்தபோது பெரும் சர்ச்சை எழுந்தது. அப்போது அது ஒரு தனியார் நிறுவனம், இதுக்கும் எமக்கும் (சீனாவிற்கும்) தொடர்பில்லை என்பதுபோல் பதிலளிக்கப் பட்டது. ஆனால் அந்த நிறுவனம் சீன அரச நலன் சம்பந்தப்பட்டநிறுவனம் என்பது இப்போது ஊர்ஜிதமாகிறது

### சீனாவின் கால் ஊன்றல் இந்தியாவிற்கான ஆபத்தே

இவ்வாறு நமது அயல்நாடு ஒன்றின் எதிரி நாடு எனத் தெரிந்தும், டொலரை ஈட்டுவதற்காக அந்நாட்டுக்கு இடமளிப்பதற்கு இலங்கை அரசு துடிக்கும்போதும் வெறுமனே எந்த இடத்தில் இடம் வழங்குகின்றனர், எவ்வளவு இடம் வழங்குகின்றனர் என்பதனை மட்டுமே கவனிப்பதோடு விட்டுவிட முடியாது.

தமது நாட்டு இராணுவ அதிகாரி ஒருவர் தலைமையிலும் பாதுகாப்பிலும் இங்கு வரும் சீனர்கள் இங்கு வசிக்கின்றார்கள், பருத்தித்துறை கடற்கரையோரத்தில் நின்றபடி கடலுக்கு மேல் ட்ரோன் விட்டு ஆய்வில் ஈடுபடுகின்றார்கள். அந்த அளவிற்கு எமது நாட்டின் நிலம் மட்டும் விற்கப்படவில்லை, இறைமையும் சேர்த்தே விற்கப்படுகின்றது என்பதுதான் உண்மை.

# ஆஸியில் மல்லிகை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா, இலங்கை, ஐரோப்பா (ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி) கனடா, அமெரிக்கா, லண்டன் ஆகிய நாடுகளில் வசிக்கும் படைப்பாளிகளை ஒருங்கிணைத்து தமிழ் எழுத்தாளர் இணைய அகத்தின் கந்தையா முருகதாசன், ஊடகவியலாளர் பண்ணாகம் கிருஷ்ணமூர்த்தியும் மேற்கொண்ட கடின உழைப்பின் மூலம் இத்தொடர் வெளியாகி தற்போது நூலுருவாகியுள்ளது.

அக்கினிக்குஞ்சு வருடாந்த விழாக்களையும் நடத்தி வாழ்நாள் சாதனையாளர்களையும் பாராட்டி விருது வழங்கி கௌரவித்து வந்துள்ளது. இதற்காகவெல்லாம் யாழ். பாஸ்கர் செலவிட்ட நேரம் மிகவும் பெறுமதியானது.

இலங்கையில் தன்னை அர்ப்பணித்து மல்லிகை கலை, இலக்கிய இதழை 45 ஆண்டுகளுக்கும் மேலாக வெளியிட்டு சாதனை புரிந்து மல்லிகை ஜீவா என்ற பெயரை நிரந்தர அடையாளமாக்கி, இந்த 2021 ஆம் ஆண்டு தொடக்கத்தில் எம்மை விட்டுப்பிரிந்திருப்பவர் டொமினிக் ஜீவா.

அவரது நினைவாக இம்மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மெல்பனில் Berwick மூத்த பிரஜைகள் மண்டபத்தில் ( Berwick senior citizens hall - 112 High Street, Berwick VIC 3806) நடைபெறும் மல்லிகை ஜீவா நினைவரங்கத்தில் யாழ். பாஸ்கர் அவர்களுடைய அளப்பரிய கலை, இலக்கிய சேவையை பாராட்டி கௌரவிக்கின்றோம்.

வாழும்போது வாழ்த்தும் மரபை பின்பற்றி, இந்த தொடர் கலை, இலக்கிய ஊழியனுக்குரிய பாராட்டை விருது வழங்கி கொண்டாடுகின்றோம்.

காலைக்கதிர்
Kalaikkathir

# வேட்டி அணிந்து வந்து நல்லூரானை வழிபட்டனர் சீனத் தூதுவர் குழுவினர்



(இ.கலையமுதன்,
எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் மற்றும் தூதரக அதிகாரிகள் வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு களில் ஈடுபட்டனர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஆலயத் துக்கு வருகை தந்திருந்த அவர்கள்,

இந்துசமய முறைப்படி வேட்டி அணிந்து வந்தனர்.

சீனத் தூதுவரின் வருகையொட்டி நல்லூர் ஆலயச் சூழலின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் கண் காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத் தப்பட்டிருந்தன.

## மனோ எம்.பியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது தற்போது நடைபெறும் தமிழ் -முஸ் லிம் கட்சிகளின் கூட்டுச் செயற்பாடு, தேசிய அரங்கில் மலையகத் தமிழ் மக்களின் எழுச்சி, இலங்கை தேசிய இனப்பிரச்சி னையில் அமெரிக்காவின் பங்கு, பொறுப் புக்கூறல், எதிர்வரும் ஐ.நா. மனித உரிமை கள் ஆணைக்குழு கூட்டங்கள் ஆகியவை பற்றி உரையாடப்பட்டன.

புதிய வருடத்தில் அமெரிக்காவில் இருந்து அரச பிரமுகர்கள், அதிகாரிகள் இலங்கை வரவுள்ளனர் எனவும், அவர் கள் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட இலங்கையின் அனைத்துத் தரப்பின ரையும் சந்திக்க ஆவலாக இருக்கின்றனர் எனவும் அமெரிக்கப் பதில் தூதர் தெரி வித்தார்.

அதேபோல் அமெரிக்கா வந்து இரா ஜாங்க திணைக்களத் அதிகாரிகளைச் சந் திக்கும்படியும் தமிழ் முற்போக்குக் கூட் டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பிக்கு அமெரிக்கப் பதில் தூதர் அழைப்பு விடுத்தார்.

தற்போதைய தமிழ் - முஸ்லிம் கட்சி களின் கூட்டுச் செயற்பாட்டின் பின்னர், தேசிய, சர்வதேசிய அரங்குகளில் நாம் முன்வைக்கவுள்ள, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் குறைந்தபட்ச யோசனை கள் அடங்கிய ஆவணத்துடன் நாம் சர் வதேச சமூகத்தை காத்திரமாக எதிர் கொள்வோம் என த.மு.கூ. தலைவர் மனோ கணேசன் பதிலளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அமெரிக்கத் தரப்பில் பதில் தூதுவர் மார்டின் கெலி, பதில் துணை தூதர் சுசன் வோல்க், அரசியல் அதிகாரி ஜெப்ரி சனின் ஆகி யோரும், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தலைவர் மனோ எம்.பியுடன், த.மு.கூ. நிதி செயலாளர் கண்டி மாவட்ட எம்.பி. எம். வேலு குமார், பொதுச்செயலா ளர் சந்திரா சாப்டர், இணைத் தவிசாளர் பேராசிரியர் விஜயசந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டனர்

## யாழ்ப்பாணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடை யில் நீண்ட காலமாக நல்லுறவு நிலவி வருகின்றது. அதன் ஓர் அங்கமாகவே சீனத் தூதரகமானது யாழ்ப்பாணம் மக் களுக்கு மீன்பிடி வலை மற்றும் உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைக் கின்றது.

இந்த உதவி வழங்கும் நிகழ்வை ஓர் ஆரம்ப நிகழ்வாகவே நாங்கள் கருதுகின் றோம். இன்று ஆரம்பமான இந்த நிகழ் வானது சீனா மற்றும் வடக்கு மக்களிடையே நல்லுறவை மேம்படுத்தும் என நாங்கள் கருதுகின்றோம்.

குறிப்பாக சீனத் தூதரகமானது இலங்கைக்குப் பல்வேறுபட்ட உதவி களை வழங்கி வருகின்றது. குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களாக உலகளா விய ரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள இந்தக் கொரோனா வைரஸ் தாக்கத்தின் போது சீனா நாடான இலங்கைக்குப் பெரு மளவில் உதவிகளை வழங்கியுள்ளது.

அதேபோல் வடக்கு, கிழக்கிலுள்ள மக் களுக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொடுப் பதில் சீனா பெரும் பங்காற்றியுள்ளது

அதேபோல் நேற்று (நேற்றுமுன் தினம்)வடக்குமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டத்துக்குமான ஐந்து நீர் சுத்திகரிக் கும் இயந்திரப் பொறிமுறையையும் வடக்கு மாகாண ஆளுநரிடம் கையளித்துள் ளோம். அதேபோல் 5 மடிக்கணினிகள் மற்றும் ஒரு தொகுதி புத்தகத்தையும் பொது நூலகத்துக்கு வழங்கியுள்ளோம்.

எனவே, இவை அனைத்தும் ஓர் ஆரம்பமாகவே நாங்கள் கருதுகின்றோம். எதிர்காலத்தில் சீனத் தூதரகம் யாழ்ப் பாணம் மக்களுக்குத் தொடர்ச்சியான உதவிகளை வழங்கும்.

உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள கொரோனாக் காலத்தில் இந்தச் சிறிய உதவி வழங்கப்படுவதை ஓர் ஆரம்பப் புள்ளியாகவே நாங்கள் பார்க்கின்றோம். எதிர்காலத்தில் உதவித் திட்டங்கள் வழங்க முடியும் - என்றார்.

## கூட்டமைப்பினரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்திருக்கவேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பட் ஜட் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப் பிக்கப்பட்டது. பட்ஜட்டை கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் எதிர்த்திருந்தனர். ஆனாலும், பட்ஜட் 3 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. இதன்மூலம் வி.மணி வண்ணன் மேயராகத் தொடர்ந்து பதவி வகிக்கவும் வாய்ப்புக்கிட்டியது. இவ்வாறான தொரு நிலையில், பட்ஜட் வாக்கெடுப்புத் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ளதாவது:-

மிகக் குறுகிய காலத்தில் மாநகர மக் களின் மனதில் மேயர் மணிவண்ணன் இடம்பிடித்துள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை. மாற்றான் தோட்டத்து மல்லிகை என்றாலும் மணம் வீசினால் அதைச் சொல்லத் தயங்க வேண்டியதில்லை. மாநகர மேயர்களில், சிறந்த செயல் வீர னாக மணிவண்ணனை மக்கள் நோக்கு கின்றார்கள். அந்த உண்மையை ஒப்புக் கொள்வதால் எந்தவொரு பின்னடைவும் எமக்கு ஏற்படப்போவதில்லை.

இவ்வாறானதொரு நிலையில், அவரால் முன்வைக்கப்படும் பட்ஜட் இரண்டு தட வைகள் தோற்கடிக்கப்பட்டு அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டிருக்குமாக இருந் தால், மக்களின் கோபங்கள் அதனைத் தோற்கடித்தவர்கள் மீதே திரும்பும். அந்தப் பழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலத்துக்கும் சுமக்க வேண்டியேற்பட் டிருக்கும். அதிஷ்டவசமாக, கூட்டமைப்பு உறுப்பினர்கள் எதிர்த்திருந்தாலும் பட்ஜட் வெற்றி பெற்றிருக்கின்றது.

முன்னைய மேயர் இ.ஆனோல்ட், சபை உறுப்பினர்களின் பரிந்துரைகளை உள்ளடக்கியே கடந்த ஆண்டு பட்ஜட்டை முன்வைத்திருந்தார். அவரை அரசியல் ரீதியான காரணங்களை முன்னிறுத்தி, இப்போதைய மேயர் மணிவண்ணன் உள்ளிட்ட தரப்பினர் தோற்கடித்திருந்தார் கள். அதற்குப் பழிவாங்கும் வகையில், மணிவண்ணனைத் தோற்கடிப்பது பொருத்தமானது அல்ல. மணிவண்ணன், ஆனோல்ட் விடயத்தில் செய்தது தவறு என்றால் அதே தவறை எமது கூட்டமைப்பு உறுப்பினர்களும் செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்த விடயத்தில் கட்சித் தலைமை ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்தித்துச் செயற்பட்டிருக்க வேண்டும்.

அதேபோன்று மணிவண்ணனும், கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஆதர வைப் பட்ஜட்டுக்குப் பெற்றிருக்கவேண் டும். சிறந்த ஆளுமையுள்ள தலைமைத் துவத்தை யாழ். மாநகருக்கு வழங்கு வதற்கு சகல அரசியல் தரப்பினரதும் முழுமையான ஆதரவு தேவை என்பதை மணிவண்ணன் மறக்கக் கூடாது. எதிர் காலத்தில் மேயர் மணிவண்ணன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்றுப் பயணிக்கக் கூடியதாக தனது அணுகு முறைகளை மாற்றியமைக்க வேண்டும் - என்றுள்ளது.

## பூஸ்டரைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. ஆனால், நாம் எதிர்பார்த்தளவு அதனைப் பெற்றுக்கொள் வதற்கு மக்கள் ஆர்வம் காட்டவில்லை.

தற்போது வைரஸ் பரவல் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு நாம் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றும் திட் டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்ததே காரணம்.

எனவே, இந்த நிலைமையைத் தக்க வைத்துக்கொள்வதற்கும், எதிர்காலத்தில் நாளாந்த நடவடிக்கைகள் பாதிக்காமல் இருப்பதற்கும் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு கோருகின்றோம்.

இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற வர் கள், மூன்று மாதங்களின் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியைப் பெறமுடியும் - என்றார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.12.2021 இல் வெளியிடப்பெற்றது.